கிலாஃபத்துடன் இணைந்திருப்பதும் அதற்குக் கட்டுப்படுவதுமே ஆன்மிக முன்னேற்றத்திற்கான வழியாகும் பக்கம் 3

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) தொடர்-8 பக்கம் 10

பராஹீனே அஹ்மதிய்யா (தொடர்-8) பக்கம் 16

நிம்மதியான குடும்ப வாழ்க்கை என்பது குழந்தைகளின் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த உத்திரவாதமாகும் பக்கம் 18


மாத இதழ்

# நுபுவ்வத் வழி


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | May 2026 | Vol. 5 - Issue No. 6

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005

Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311


**மேலும் நீங்கள் யாவரும் [ஒன்றுபட்டு] அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்.**

[திருக்குர்ஆன் 3:104]





# திருக்குர்ஆன்

وَعَدَ اللّٰهُ الَّذِيۡنَ اٰمَنُوۡا مِنۡكُمۡ وَعَمِلُوا
الصّٰلِحٰتِ لَيَسۡتَخۡلِفَنَّهُمۡ فِى الۡاَرۡضِ كَمَا
اسۡتَخۡلَفَ الَّذِيۡنَ مِنۡ قَبۡلِهِمۡ ۖ وَلَيُمَكِّنَنَّ
لَهُمۡ دِيۡنَهُمُ الَّذِى ارۡتَضٰى لَهُمۡ
وَلَيُبَدِّلَنَّهُمۡ مِّنۡۢ بَعۡدِ خَوۡفِهِمۡ اَمۡنًا ؕ
يَعۡبُدُوۡنَنِىۡ لَا يُشۡرِكُوۡنَ بِىۡ شَيۡــًٔا ؕ وَمَنۡ
كَفَرَ بَعۡدَ ذٰ لِكَ فَاُولٰۤـئِكَ هُمُ الۡفٰسِقُوۡنَ

மேலும் அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்தின் நிலைக்குப் பிறகு (அதை) அமைதியின் நிலையாக மாற்றுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவர். (24:56)



# ஹதீஸ்

قَال رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
تكُونُ النُّبُوَّةُ فِيكُمْ ما شاءَ اللّٰهُ أنْ تكُونَ،
ثُمَّ يَرْفَعُها إذا شَاءَ أنْ يَرْفَعَها، ثُمَّ تَكُونُ
خِلافَةٌ عَلى مِنهاجِ النُّبُوَّةِ، فَتَكُونُ ما شاءَ اللّٰهُ
أنْ تَكُونَ، ثُمَّ يَرْفَعُها إذا شاءَ اللّٰهُ أنْ يَرْفَعَها،
ثُمَّ تَكُونُ مُلْكًا عاضًّا، فَيَكُونُ ما شاءَ اللّٰهُ
أنْ يَكُونَ، ثُمَّ يَرْفَعُها إذا شَاءَ أنْ يَرْفَعَها،
ثُمَّ تَكُونُ مُلْكًا جَبْرِيَّةً، فَتَكُونُ ما شاءَ اللّٰهُ
أنْ تَكُونَ، ثُمَّ يَرْفَعُها إذا شاءَ أنْ يَرْفَعَها،
ثُمَّ تَكُونُ خِلافَةً عَلى مِنهاجِ نُبُوَّةٍ ثُمَّ سَكَتَ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“அல்லாஹ் நாடும் வரை உங்களிடத்தில் இந்த நுபுவ்வத் இருக்கும். பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் உருவாகும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு கொடுங்கோல் ஆட்சி இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு பலவந்தமான ஆட்சி ஏற்படும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பின்னர் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் இருக்கும்.” பின்னர் அன்னார் மௌனமாகி விட்டார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 404)

# கிலாஃபத்துடன் இணைந்திருப்பதும் அதற்குக் கட்டுப்படுவதுமே ஆன்மிக முன்னேற்றத்திற்கான வழியாகும்

❖❖❖ மவ்லானா அதாவுல் முஜீப் லோன் சாஹிப் (அடிஷனல் நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத், ஜுனுபி ஹிந்த்) ❖❖❖

தமிழாக்கம்: மவ்லவி N. ஜியாவுல் ஹக்

وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا ۠ وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ
اِذْ كُنْتُمْ اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ فَاَصْبَحْتُمْ بِنِعْمَتِهٖۤ اِخْوَانًا ۚ
وَكُنْتُمْ عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ فَاَنْقَذَكُمْ مِّنْهَا ؕ
كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ

அல்லாஹ்வின் கயிற்றை அனைவரும் உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஒருபோதும் பிரிந்து விடாதீர்கள். மேலும் உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்கு பகைவராக இருந்தீர்கள். அவன் உங்களது உள்ளங்களைப் பரஸ்பரம் இணைத்து விட்டான். மேலும் நீங்கள் அவனது அருளினால் சகோதரர்களாகி விட்டீர்கள். மேலும் நீங்கள் நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் நின்றீர்கள். அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறு அல்லாஹ் இதன் மூலமாக நீங்கள் நேர்வழி பெற வேண்டும் என்று தனது அடையாளங்களை உங்களுக்காக தெள்ளத் தெளிவாக விளக்குகின்றான். (3:104)

நமது உறுதியான மற்றும் முழுமையான நம்பிக்கை என்னவென்றால் கலீஃபாவை இறைவன்தான் உருவாக்கு-கின்றான். இந்த ஈமானும் நம்பிக்கையும் ஏதோ ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் உருவானது அல்ல. மாறாக இதன் அடித்தளம் அல்லாஹ்வின் வாக்குறுதி மற்றும் அவனது செயல் வடிவிலான சாட்சியங்களைக் கொண்டதாகும். இதனை அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்களுக்-காகவும் அல்லாஹுத்தஆலா தனது இந்த செயல் ரீதியிலான சாட்சியங்களின் மூலம் நம்மீது வெளிப்படுத்தி இருக்கின்றான். மேலும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றான். அதாவது நீங்கள் உங்களது கருத்துக்களைத் தெரிவித்திருந்தீர்கள் ஆனால் நான்தான் அவர்களைத் தேர்ந்தெடுத்தேன்.

நான் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தேர்தல் சமயத்தில் நடைபெற்ற ஓர் உதாரணத்தை மட்டும் இங்கு கூறுகின்றேன். ஆஸ்திரியாவைச் சார்ந்த ஜமாஅத்தின் சதர் கண்ணியத்திற்-குரிய காஸீ ஷஃபீக் அஹ்மது சாஹிபின் மனைவி ரிஸ்வானா ஷஃபீக் சாஹிபா கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மரணித்த நாளன்று நான் வீட்டில் இருந்தவாறு MTA-வின் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்றைய நாள் எனது கணவர் காஸீ ஷஃபீக் அஹ்மது சாஹிப் இலண்டன் சென்று இருந்தார். எனவே நான் தனியாக அமர்ந்து ஒவ்வொரு நொடிப்பொழுதும் டிவியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இரவில் கிலாஃபத் கமிட்டி அமர்ந்திருந்த போது அஹ்மதிகள் நிம்மதியற்ற நிலையில் துஆக்களைச் செய்து கொண்டு இறைவனிடத்தில் ரஹ்மத்தையும் வேண்டிக் கொண்டிருந்தார்கள். மேலும் இரண்டாவது வல்லமையின் ஒரு புதிய தோற்றத்தைப் பார்ப்பதற்காக ஃபஸ்ல் பள்ளிவாசலை நோக்கி பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். நானும் இந்த காட்சியை MTA-வில் பார்த்துக் கொண்டிருந்தேன்.



திடீரென்று சோர்வின் காரணமாக சற்று சாய்ந்து உட்கார்ந்திருந்தேன், அப்போது எனக்கு உறக்க நிலையா அல்லது சிந்தனை நிலையா? என்பது தெரியவில்லை. ஆனால் ஓர் ஒளி திடீரென்று வானத்திலிருந்து இறங்கி வருகின்றது. அது மிகவும் ஒளிமிக்கதாக இருக்கிறது. அது பூமியை நோக்கி வருகின்றது. நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது கிலாஃபத் கமிட்டி அமர்ந்திருந்த இடத்தில் அந்த ஒளி புகுந்து விட்டது. அந்த நேரத்தில் எனது உள்ளத்தில் தற்போது கலீஃபத்துல் மஸீஹாக தேரதேடுக்கப்படுபவரின் பெயர் ஹரூஃபே அப்ஜத் மீமிலிருந்து துவங்கும் என்ற சிந்தனை தோன்றியது. நான் பார்த்துக் கொண்டே இருக்கும்போது அந்த ஒளி 'மீம்' என்ற பெயரைக் கொண்ட 'மஸ்ரூர்' என்பவர் இடத்தில் நுழைந்து விட்டது. மேலும் இந்த வார்த்தை எனது உள்ளத்தில் பிரதிபலித்துக் கொண்டேயிருந்தது. பிறகு எனது நாவிலும் வெளிப்பட ஆரம்பித்தது. அதாவது அல்லாஹ் தனது பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து விட்டான். மேலும் யாரிடத்தில் தனது ஒளியை வழங்க வேண்டுமோ அவருக்கு வழங்கி விட்டான். ஆக இப்படிப்பட்ட நிலையில் எனது கண்கள் திடீரென்று திறந்து விட்டது. பிறகு அந்த காட்சி எனது பார்வையிலிருந்து மறைந்து விட்டது. பின்னர் நான் என்ன காட்சியைக் கண்டேன் என்று எனது உடல் பதட்டம் அடைய

ஆரம்பித்தது. எனது உள்ளத்தில் பயம் ஏற்பட ஆரம்பித்தது. ஆனால் உள்ளம் இறைவன் தனது முடிவை எடுத்து விட்டான் என்று உறுதி கொண்டது. தற்பொழுது மக்களிடத்தில் அது வெளிப்படுத்தப்படுவது மட்டுமே எஞ்சியிருந்தது. நான் அந்த நேரத்திலேயே எனது கணவர் காஸீ ஷ.ஃபீக்கை ஃபோனில் தொடர்பு கொண்டேன். அவர் மஸ்ஜித் ஃபஸ்ல் இலண்டனுக்கு வெளியில் அமர்ந்திருந்தார். நான் அவரிடத்தில் இந்த அனைத்து சம்பவத்தையும் கூறினேன். மேலும் இறைவன் தனது கலீஃபாவைத் தேர்ந்தெடுத்து விட்டான் என்றும் தற்பொழுது அறிவிப்பு செய்வது மட்டுமே பாக்கி இருக்கிறது. அந்த இறைவன் தனது சாதாரண அடியாரில் தனது ஒளியை நிரப்பி தனது சிறப்பிற்குரிய அடியாராக அவரைத் தேர்ந்தெடுத்து விட்டான் என்று கூறினேன்.



அந்த நேரத்தில் அறிவிப்பு வெளியாக இருக்கிறது. ஃபோன் தொடர்பைத் துண்டிக்கும்படி அவர் என்னிடம் கூறினார். ஆக நானும் MTA-வில் நேரடியாக அந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு நொடிப்பொழுதும் காத்துக் கொண்டிருந்தேன். அப்போது கண்ணியத்திற்குரிய இலண்டன் மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளிவாசலின் இமாம் அத்தாவுல் முஜீப் ராஷித் சாஹிப் அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹாக மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் நமது கலீஃபாவாக இருப்பார்கள். இறைவன் நமது அன்பிற்குரிய தலைவருக்கு உடல் ஆரோக்கியத்துடன் கூடிய நீண்ட வாழ்வு வழங்குவானாக. அவரது அருளுக்குரிய இருப்பானது நீண்ட காலம் நிலை பெறட்டுமாக. ஆமீன். ஸும்ம ஆமீன். (பத்ர் பத்திரிக்கை 20 டிசம்பர் முதல் 27 செப்டம்பர் 2005)

ஆக இறைவன் சுயமே தேர்ந்தெடுத்த இப்படிப்பட்ட கிலாஃபத் பற்றி அந்த கிலாபஃத்துடன் இணைந்திருப்பதில் தான் எல்லா விதமான அருளும் ஆன்மிக முன்னேற்றமும் அடங்கி இருக்கிறது என்பதில் யாருக்காவது உள்ளத்தில் சிறிதளவும் சந்தேகம் ஏற்பட முடியுமா என்ன?

அல்லாஹ் மனிதனை இந்த உலகில் ஏன் படைத்தான் என்றால், அவன் இவ்வுலகில் இருந்தவாறு இந்த உலகத்தின் பிரச்சினைகளைச் சந்தித்தவாறு அந்த பிரச்சனைகளினால் தாக்கத்திற்கு உள்ளாகாமல் எப்படிப்பட்ட நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிகத்தைப் பெற வேண்டுமென்றால் அவன் உலகை விட்டுச் செல்லும்போது அல்லாஹ் அவனைக் குறித்து இவ்வாறு அழைக்க வேண்டும்.

நிம்மதி அடைந்த ஆன்மாவே! நீ திருப்தி அடைந்தவாறு உன் இறைவன் பால் திரும்புவாயாக. நீ எனது அடியார்களுடன் நுழைந்து விடுவாயாக. மேலும் எனது சொர்க்கத்தில் நுழைந்து விடுவாயாக.

ஆக நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிக முன்னேற்றம் மனிதன் படைக்கப்பட்ட அடிப்படை நோக்கமாக இருக்கின்றது. எவர் ஒருவர் இவ்வுலகில் தனது ஆன்மாவை நல்லொழுக்க ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் சீர் செய்தவாறு வெற்றி பெறுவாரோ அவர் தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்: அதாவது எவர் தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தினாரோ அவர் வெற்றி பெற்று விட்டார். மேலும் இதில் எவர் தோல்வி அடைகின்றாரோ அவர் தொடர்பாக, அதாவது யார் தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதற்குப் பகரமாக மண்ணோடு மண்ணாகி விட்டாரோ அவர் தோல்வியடைந்து விட்டார்.

ஆன்மாவின் பரிசுத்தம், நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிக முன்னேற்றம் ஆகியவற்றுக்கான ஏற்பாட்டை இறைவன் சுயமே செய்து வைத்திருக்கிறான். இந்த அமைப்பானது இந்த ஏற்பாடானது நபிமார்கள் மற்றும் முர்ஸலீன்கள் மற்றும் அவர்களுக்குப் பிறகு கிலாஃபத் என்ற அருளுக்குரிய அமைப்பின் வடிவில் உலகில் வெளிப்படுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றம் இந்த இருள் நிறைந்த காலகட்டத்தில் உலகில் ஒரு ஆன்மிகப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இருந்தது. அன்னார் கூறுகின்றார்கள்: தற்பொழுது அல்லாஹ் இதைத்தான் எண்ணியிருக்கின்றான், அதாவது அவன் உலகில் இறையச்சம் மற்றும் பரிசுத்த வாழ்விற்கான ஒரு முன்மாதிரி காட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த அமைப்பை இந்த இயக்கத்தை அவன் உருவாக்கி இருக்கின்றான். அவன் பரிசுத்தத்தை விரும்புகின்றான். மேலும் ஒரு பரிசுத்த ஜமாஅத்தை உருவாக்குவது அவனது எண்ணமாகவும் இருக்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 96-97)

எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் உலகில் ஓர் ஆன்மிகப் புரட்சியை உருவாக்குவதோ, அதே போன்று அன்னாருக்குப் பிறகு அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப நிலைபெற்ற கிலாஃபத் அமைப்பின் நோக்கமும் உலகில் ஓர் ஆன்மிகப் புரட்சியை உருவாக்குவதும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கைகளில் அடித்தளம் இட்ட அந்த ஆன்மிக முன்னேற்றத்தை உயிருடன் வைப்பதாகும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்: அஹ்மதிய்யா கிலாஃபத் உலகில் ஒரு புரட்சியை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட -தாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் விதைக்கப்பட்ட அந்த விதையைப் பராமரிப்பதற்காகவும் மஹ்திவுடைய நோக்கத்தை முழுமை பெறச் செய்வதற்காவும்

அஹ்மதிய்யா கிலா∴பத் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தைப் பெறுவதற்காகவே அஹ்மதிய்யா கிலா∴பத் நிலைபெறச் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் நீங்கள் அஹ்மதிய்யா கிலா∴பத்தின் ஆணிவேரை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். உங்களது சந்ததிகளுக்கும் இதன் முக்கியத்துவத்தை எடுத்துரையுங்கள். (ஸபீலிர் ரஷாது தொகுதி 2 பக்கம் 353)

ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள்! இக்காலத்தில் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப மேலும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தெளிவான கூற்றிற்கேற்ப கிலா∴பத்துடன் தொடர்பு வைத்திருப்பதன் மூலமே நம்பிக்கை மற்றும் செயலில் முன்னேற்றம் ஏற்படும். அவர் எவ்வளவு பெரிய ஆலிமாக இருந்தாலும் சரி, சிந்தனையாளராக இருந்தாலும் வெளிப்படையில் ஏதாவது ஆன்மிக அந்தஸ்தை அடைந்திருந்தாலும் சரி, காலத்தின் கலீ∴பாவுடன் கொண்டிருக்க வேண்டிய தொடர்பின் தரம் எந்தளவு இருக்க வேண்டுமோ அந்தளவு இல்லை என்றால் பிறகு ஜமாஅத்தின் முன்னேற்றம் அல்லது ஒருவரது ஆன்மிக முன்னேற்றத்தில் அவரது அந்த அந்தஸ்து துரும்பளவு எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது. அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இந்த விஷயத்தை ஆழமாகப் புரிவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. (அல் ∴பஸ்ல் 23 மே 2014)

இக்காலத்தில் நிராகரிப்பு, வழிகேடு, இணைவைப்பு, சிலை வணக்கம் போன்றவற்றின் புயல் காற்று மனித இனத்தின் அனைத்து நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிக மேன்மைகளை முழுவதுமாக அழிக்க முற்பட்டுக் கொண்டிருக்கும்போது, இந்தப் புயலிலிருந்து தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதற்கும், தனது ஆன்மிகத்தை அழிந்து போவதிலிருந்து பாதுகாப்பதற்கும் அல்லாஹ் கிலா∴பத் என்ற மகத்தான அருளை வழங்கியிருக்கின்றான். அவ்வாறிருக்கையில் நாம் நம்மை “ஹப்லுல்லாஹ்” அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட கயிற்றினால் அதாவது கிலா∴பத்துடன் பிணைக்க வேண்டும். அந்தக் கயிற்றின் ஒரு பகுதியை ஈருலகத்தின் அதிபதி இக்காலத்தில், காலத்தின் இமாமின் கையில் வழங்கியுள்ளார். அந்த இமாம்தான் ஷைத்தானின் ஒவ்வொரு தாக்குதலிலிருந்தும் நம்மைக் காக்கும் கேடயமாவார்.

தற்காலத்தின் வழிகேடு தொடர்பாகவும், தஜ்ஜாலிய குழப்பம் தொடர்பாகவும் எச்சரிக்கை செய்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த முக்கியதுவம் வாய்ந்த அறிவுரையை வழங்கியுள்ளார்கள்.

அதாவது முஸ்லிம்களின் ஜமாஅத் மற்றும் அவர்களது இமாமுடன் இணைந்திருங்கள். அறிவிப்பாளர் வினவினார்: முஸ்லிம்களின் ஜமாஅத் இல்லையென்றால் மேலும் அவர்களுக்கு ஓர் இமாம் இல்லையென்றால் என்ன செய்வது? அதற்கு அன்னார் கூறினார்கள்: அவ்வாறென்றால் அவர்களிடமிருந்து பிரிந்து விடுங்கள். உங்களுக்கு காட்டில் சென்று மரத்தின் வேர்களைச் சாப்பிட நேரிட்டாலும் சரி, எந்தளவுக்கென்றால் அந்நிலையிலேயே உமக்கு மரணம் நேரிட்டாலும் சரியே! (ஸஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 7084)

ஷைத்தான் இக்காலத்தில் தனது அனைத்து ஆயுதங்களுடன் அனைத்து உதவியாளர்களுடன் நமது ஈமான் மற்றும் ஆன்மிகத்தை அழிப்பதற்காக நாலாபுறமும் தாக்குதல் நடத்திக் கொண்டிருகின்றான். ஆக இக்காலத்தில் கிலா∴பத்துடன் இணைந்திருப்பதன் அவசியம் மேலும் அதிகரித்து விட்டது. காலத்தின் கலீ∴பா அவர்கள்தான்




கேடயமாக நின்று நம்மைக் காப்பாற்ற முடியும். உலகில் இந்த ஷைத்தானிய தாக்குதலிலிருந்து பாதுகாக்கக்கூடிய வேறெந்த வழியுமில்லை. ஆகையால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னமல் இமாமு ஜுன்ன(த்)துன் யுகாத்தலு மின் வராயிஹி வயுத்தகி பிஹி. இமாம் ஒரு கேடயமாவார். அவர் பின்னால் பின்னால் நின்று தான் ஷைத்தானுடன் போரிட்டு வெற்றி பெற முடியும். அதன் மூலமாகவே ஷைத்தானின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு பெறவும் முடியும் எனக் கூறியுள்ளார்கள். (புகாரி ஹதீஸ் 2957)

மற்றோரிடத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கலீ∴பத்துல்லாஹ்வுடன் இணைந்திருப்பது தொடர்பாக வலியுறுத்தியவாறு கூறுகின்றார்கள்:

அதாவது நீ பூமியில் அல்லாஹ்வின் கலீ∴பாவைக் கண்டால் அவருடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வீராக. இதற்காக உமது உடல் கிழிக்கப்பட்டாலும் சரி, உமது செல்வம் பறிக்கப்பட்டாலும் சரி.

ஒரு ஹதீஸில் கூறுகின்றார்கள்: அதாவது எவர் ஒருவர் ஜமாஅத்தை விட்டு தனித்து செல்வாரோ அவர் நெருப்பில் எறியப்படுவார். (திர்மிதி கிதாபுல் பிதன்)

அல்லாஹ் நம்மீது எந்தளவு பேரருள் செய்துள்ளான் என்றால் அவன் நமக்கு எல்லா தீமைகளிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் ஷைத்தான் மற்றும் தஜ்ஜாலிய

தாக்குதலிலிருந்தும் நமது ஈமான், நம்பிக்கை, நமது நல்லொழுக்க நிலைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு கேடயமாக இருக்கக்கூடிய, ஈயத்தால் பூசப்பட்ட மதில் போன்று நிற்கக்கூடிய அந்த ஆன்மிகக் கிலா∴பத்தை வழங்கியுள்ளான்.

காலத்தின் கலீ∴பா நமது தூய்மை மற்றும் தரபிய்யத்திற்காக இரவையும் பகலையும் ஒன்றாக்கி செயல்பட்டுக் கொண்டிருகின்றார்கள். இரவுகளில் நமக்காக துஆ செய்து வருகின்றார்கள். அவரது வேதனை நிறைந்த மனம் ஜமாஅத் உறுப்பினர்களுக்காக எந்நேரமும் துடித்துக் கொண்டிருக்கிறது. அவரது சிந்தனை மற்றும் எண்ணத்தின் நோக்கம் ஜமாஅத் மக்களின் தரபிய்யத் மற்றும் த∴லீம் ஆகும். அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்த சந்தர்ப்பம் நன்றி ஸஜ்தா செய்வதற்கானதாகும். அனைத்தையும் அர்ப்பணம் செய்தவாறு அவனது வழியில் தியாகம் செய்ய வேண்டிய தருணமாகும். அவன் கிலா∴பத் போன்ற மகத்தான அருளை நமக்கு வழங்கியிருக்கின்றான்.




கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் இருப்பு இறைவனின் ஒளியினால் ஒளிமயமாக்கப்பட்டு ஓர் ஒளிமிக்க இருப்பாக ஆகி விடுகிறது. அவர் மூலமாக உலகில் இறைவனது ஒளி பரவ ஆரம்பிக்கிறது. மேலும் அவர் உலகில் ஆன்மிகத்தைப் பரப்புவதில் மையப் புள்ளியாக ஆகி விடுகின்றார். அந்தத் தூயவருடன் தனிப்பட்ட தொடர்பை உருவாக்குவதால் மனிதன் தனது மார்க்கம் மற்றும் உலகினை சீர்படுத்தக் கூடியவனாக ஆகி விடுகின்றான். ஆக இறைவனிடமிருந்து காலத்தின் கலீ∴பாவுக்கு கிடைக்கக் கூடிய ஒளி, அறிவு, ஞானம், மற்றும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளங்களிலிருந்து அருள் பெறக்கூடிய மூ∴மினுக்கு ஒரு முக்கிய கடமை என்னவென்றால், காலத்தின் கலீ∴பாவுடன் அன்பு, நெருக்கம் மற்றும் அர்ப்பணம் ஆகியவற்றின் ஒரு தனிப்பட்ட மற்றும் நெருங்கிய தொடர்பை உருவாக்க வேண்டும்.

திருக்குர்ஆனில் இவ்வாறு ஒரு கட்டளை உள்ளது. அதாவது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுடன் தாய் தந்தை, சந்ததிகள், சகோதரர்கள், மனைவிகள், உறவினர்கள், உலகச் செல்வங்கள், உலக வியாபாரங்கள் ஆகிய அனைத்தையும் விட அதிக நேசம் கொள்ள வேண்டும். மேலும் கூறுகின்றான்: இவை அனைத்தும் உங்களுக்கு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலை விட, அவனது வழியில் ஜிஹாது செய்வதை விட அதிக விருப்பமுள்ளதாக இருக்கிறதென்றால் அல்லாஹ் அவனது தீர்ப்பை தரும் வரை காத்திருங்கள். அல்லாஹ் குழப்பவாதிகளை நேசிப்பதில்லை. (அத்தவ்பா வசனம் 24)

ரஸூலுக்குப் பின் கலீ∴பா அவரது பிரதிநிதியாக இருக்கின்றார். ஆகையால் காலத்தின் கலீ∴பாவுடனும் உலகின் அனைத்து நேசத்திற்குரிய பொருளை விடவும் தொடர்பை விடவும் அதிக நேசம் கொள்வது நமது கடமையும் கட்டாயமுமாகும் .

ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இரண்டாவது வல்லமை தோன்றி இருக்காவிட்டால் இஸ்லாம் ஒருபோதும் முன்னேற்றம் அடைய முடியாது. ஆகையால் இந்த வல்லமையுடன் முழுமையான தூய்மை, அன்பு, விசுவாசம் மற்றும் நெருக்கத்திற்கான தொடர்பை ஏற்படுத்துங்கள். கிலா∴பத்துடன் கட்டுபடுதலுக்கான உணர்வை நிரந்தமாக்குங்கள். அதன் அன்பின் உணர்வை ஏனைய அனைத்து உறவுகளும் குறைவாகத் தெரியும் அளவுக்கு அதிகரிக்க செய்யுங்கள். இமாமுடன் இணைந்திருப்பதில்தான் அருள் இருக்கிறது. அதுதான் உங்களுக்கு எல்லா விதமான குழப்பம் மற்றும் சோதனைகளிலிருந்து காக்கும் கேடயமாகும். (மஷ்அலே ராஹ் தொகுதி 5 பக்கம் 5)

நல்லொழுக்கம், ஆன்மிக முன்னேற்றம் மற்றும் உண்மையாளர்களின் நட்பு அவசியம் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். كُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ அதாவது உண்மையாளர்களுடன் இணைந்திருங்கள். (9:119)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையாளர்களுடன் இணைந்திருப்பது அவசியமாகும். பல்வேறு மக்கள் தொலைவில் இருந்து கொண்டு எப்போதாவது வருவோம் தற்போது நேரமில்லை எனக் கூறுகின்றனர். 1300 வருடங்களுக்குப் பிறகு முன்னறிவிக்கப்பட்ட ஜமாஅத்தை அடைந்த மக்கள் அதன் உதவியில் பங்கெடுக்கவில்லை என்றால் இறைவன் மற்றும் அவனது ரஸூலினால் வாக்களிக்கபட்டவருடன் அமரவில்லை என்றால் அவர் வெற்றி பெறுவாரா? ஒருபோதும் இல்லை. (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 124)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது கையில் ஒரு விளக்கு உள்ளது. என்னிடத்தில் வருபவர் நிச்சியம் அதிலிருந்து பலன் பெறுவார். ஆனால் எவர் தப்பெண்ணம் மற்றும் யூகத்தினால் விலகிச் செலவாரோ அவர் இருளில் இடப்படுவார். இக்காலத்தின் உறுதிவாய்ந்த கோட்டை நான் ஆவேன். எவர் என்னில் நுழைவாரோ அவர் திருடர்கள், கொள்ளையர்கள் மற்றும் காட்டு விலங்குகளிடமிருந்து தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வார். ஆனால் எவர் எனது சுவற்றிலிருந்து அகன்று நிற்க விரும்புவாரோ அவருக்கு எல்லாப் புறத்திலிருந்தும் மரணம் உள்ளது. அவரது சடலம் கூட பாதுகாப்பாக இருக்காது. (இஸ்லாத்தின் வெற்றி ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக். 34)

“உண்மையுடன் என்பக்கம் வாருங்கள் இதில் தான் நன்மையுள்ளது. எல்லாபுறமும் காட்டு மிருகங்கள் உள்ளன நான் பாதுகாப்பு கோட்டை ஆவேன்.”

தற்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு அந்த விளக்கு காலத்தின் கலீ∴பா

அவர்களின் கையில் உள்ளது. காலத்தின் கலீ∴பா அவர்களின் தோழமையில் இருப்பது உள்ளம் மற்றும் ஆன்மாவின் தூய்மைக்கு அவசியமாகும்.

இக்காலத்தில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் முன்னோர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நிலைபெற்றுள்ள MTA என்ற மகத்தான திட்டம் மூலம் இன்று நாம் காலத்தின் கலீ∴பா அவர்களுடன் அமர்வதற்கான நற்பேற்றை பெற்றுக் கொண்டிருக்கின்றோம். இன்று இறைவன் MTA மூலமாக காலத்தின் கலீ∴பா மற்றும் பொதுமக்களுக்கு இடையில் இருக்கும் தொலைவை அகற்றி விட்டான். சூழ்நிலை காரணமாக காலத்தின் கலீ∴பாவிடம் நேரடியாக செல்ல முடியவில்லை. ஆனால் MTA-வின் அருளினால் ஒவ்வொரு நாளும் நமது வீட்டில் தோற்றமளிக்கிறார்கள். எந்தளவு இன்று காலத்தின் கலீ∴பா அவர்களைப் பார்பதற்கும், அவருடைய கருத்துக்களைக் கேட்பதற்கும் வாய்ப்பு கிடைக்கிறதோ இது போன்ற வாய்ப்பு மனித வரலாற்றில் எந்த நபி மற்றும் கலீ∴பாவின் காலத்திலும் கிடைக்கவில்லை. ஆகையால் தற்போதும் நாம் நேரத்தை ஒதுக்கி MTA மூலமாக ஒளிபரப்பாகக் கூடிய காலத்தின் கலீ∴பா அவர்களின் நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் செய்யவில்லை என்றால் இது இந்த மகத்தான அருளுக்கு அவமரியாதை ஆகும். இது நமக்கு சிந்திக்க வேண்டிய தருணமாகும்.

அல்லாஹ் ஆன்மிக வாழ்வினை நபிமார்களுக்குப் பிறகு கலீ∴பாக்களுடன் தொடர்புபடுத்தி வைத்துள்ளான். ஆகையால் ஆன்மிக முன்னேற்றத்திற்கு எல்லா விதமான அருள்களைப் பெறுவதற்கு கிலா∴பத்தின் நிழலின் கீழ் இருந்தால்தான் சாத்தியமாகும். இறைவனின் இபாதத்திற்கான சரியான உரிமையைச் செலுத்துவது கிலா∴பத்துடன் தொடர்பில்லாமல் முடியாது. ஷைத்தான் மற்றும் தஜ்ஜாலிய குழப்பங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவது கிலா∴பத்துடன் தொடர்பின்றி சாத்தியமில்லை. நற்செயல்கள் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைப்பது கிலா∴பத்துடன் தொடர்பின்றி சாத்தியமில்லை. தஜ்ஜாலின் ஏமாற்றத்திலிருந்து, ஷைத்தானிய வல்லமைகளின் ஏமாற்றத்திலிருந்து, தீமைகளினால் கட்டப்பட்டுள்ள வலையிலிருந்து பாதுகாப்புப் பெறுவது கிலா∴பத்துடன் இணைந்திருப்பதில் தான் உள்ளது. அனைத்தையும் விட துஆக்களின் அருள் மற்றும் பரக்கத் கிலா∴பத்துடன் இணைந்திருப்பதில்தான் உள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஒருவரை கிலா∴பத் அந்தஸ்தில் அமர வைக்கும்போது அவரது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதை அதிகரித்து விடுகிறான். ஏனென்றால் அவரது துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் அவனது தேர்ந்தெடுப்பிற்கு இழுக்காகும். (மன்சபே கிலா∴பத் பக்கம் 32 பதிப்பு 1914)

மேலும் கூறுகின்றார்கள்: உங்களுக்காக உங்களின் வேதனைகளை உணரக்கூடியவர், உங்கள் மீது அன்பு கொள்ளக்கூடியவர், உங்களது துக்கத்தை தனது துக்கமாக எண்ணக்கூடியவர், உங்களது கஷ்டங்களை தனது கஷ்டமாக கருதக்கூடியவர், உங்களுக்காக இறைவனிடம் துஆ செய்யக்கூடியவர். ஆனால் பிற மக்களுக்கு



யாருமில்லை. உங்களைப் பற்றி அவருக்கு கவலை உள்ளது. வேதனை உள்ளது. உங்களுக்காக தனது இறைவனிடத்தில் துடிக்கின்றார். ஆனால் பிற மக்களுக்கு இவ்வாறு யாருமில்லை, யாருக்காவது உடல் நிலை சரியில்லை என்றால் அவருக்கு நிம்மதி இருப்பதில்லை, ஆயிரம் அல்ல; இலட்சக்கணக்கில் நோயாளிகளாக உள்ள அந்த மனிதரின் நிலையை உங்களால் அனுமானிக்க முடியுமா? (பரக்காத்தே கிலா∴பத், அன்வாருல் உலூம் தொகுதி 2, பக்கம் 156)

நம் மீதான அன்பினால் நிரம்பியுள்ள கலீ∴பா அவர்களின் துஆக்கள் எவர் ஒருவர் உண்மையான ரீதியில் கிலா∴பத்துடன் தொடர்பு கொண்டிருப்பாரோ அவருக்காகத் தான் நிறைவேறும்.

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

எண்ணற்ற மக்கள் துஆவுக்காக எழுதுகின்றார்கள். தனிப்பட்ட முறையில் எனக்கு எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் இறைவன் என்னை கிலா∴பத் அந்தஸ்தில் அமர வைத்துள்ளான். ஆகையால் ஏதாவது ஓர் அஹ்மதிக்கு கிலா∴பத் அந்தஸ்தின் மீது அன்பு இல்லையென்றால், அல்லது அந்த அந்தஸ்துடன் நேசம் இல்லையென்றால், காலத்தின் கலீ∴பாவின் துஆ அவரது உரிமையில் ஏற்றுக் கொள்ளப்படாது. ஆகையால் நாவளவிலும், செயலவிலும் கிலா∴பத்திற்குக் கட்டுப்படுவது அவசியமாகும். அல்லாஹ் எவர் கிலா∴பத்துடன் உண்மையான விசுவாசத்துடன் இருக்கின்றாரோ அவருடைய துஆவைதான் ஏற்கின்றான். (அல் ∴பஸ்ல் 6 பிப்ரவரி 2001)

ஆக நாம் காலத்தின் கலீ∴பாவின் ஒப்புக் கொள்ளப்படும் துஆக்களுக்கு வாரிசாக வேண்டுமென்றால் அளவு கடந்த அன்பு காட்டக்கூடிய கலீ∴பாவுடன் நமது தொடர்பை உறுதியாக்க வேண்டும். எப்படிப்பட்ட உறுதியென்றால் உலக உறவுகளில் அதற்கு உதாரணம் கிடைக்கக் கூடாது.

ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தனிச்செயலர் கண்ணியதிற்குரிய முனீர் அஹ்மது ஜாவீது சாஹிப் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் தொடர்பாக சாட்சியம் அளித்தவாறு கூறுகின்றார்கள்: நான் கண்கண்ட சாட்சியாக இதனைக் கூறுகின்றேன். இன்று பூமியின் மேல் இறைவன் மற்றும் அவனது ரஸூலின் உண்மையான

பிரதிநிதிக்கான மேன்மையை அஹ்மதிய்யா கிலா∴பத் மட்டுமே பெற்றுள்ளது. மேலும் நான் கலீ∴பா அவர்களின் நாவிலிருந்து வெளிவரும் வார்த்தை அசாதாரணமான முறையில் நிறைவேறுவதைப் பார்த்ததற்கு சாட்சியளிக்கின்றேன். நான் காலத்தின் கலீ∴பா அவர்களின் துஆக்களினால் உள்ளங்கள் மாறுவதைப் பார்த்துள்ளேன். கவலையுற்ற முகம் கொண்டு மக்கள் மிகவும் நிம்மதியற்றவாறு சந்திப்பதற்கு வருவார்கள். பிறகு ஹுஸூர் அவர்களின் அன்பு நிறைந்த அறிவுரைகள், ஆலோசனைகள் மற்றும் துஆக்களுக்குப் பிறகு மன நிம்மதியுடன் மகிழ்ச்சி நிறைந்த முகத்துடன் திரும்பிச் செல்வதைக் கண்டுள்ளேன். இறைவன் மீது ஆணையாக! காலத்தின் கலீ∴பாவுடன் உண்மையான நெருக்கமும், அன்னாருடன் உயிருள்ள தொடர்பையும் கொண்டிப்பவர்களின் தக்தீர் மாறுவதையும், இல்லை என்பது இருப்பதாக ஆவதையும் கண்டுள்ளேன். ஹஸ்ரத் அமீருல் மூ∴மினீன் அவர்களுக்கு தினசரி கடிதங்கள் ஆயிரக்கணக்கில் வருகின்றன. அதில் பெரும்பாலானவை நோய்கள், கஷ்டங்கள் துன்பங்கள் போன்றவை நீங்குவதற்காக துஆவிற்கான விண்ணப்பமாக இருக்கும். ஆனால் சில நாட்களிலே இறைவனது கலீ∴பாவின் இரவு நேர துஆக்கள் அவர்களது நிலைமைகளை மாற்றி விட்டது என்பது தெரிய வரும். பல்வேறு நோயாளிகள் நிவாரணம் பெற்றனர். எந்தளவுக்கென்றால் மருத்துவர்களால் சில நாட்கள் அல்லது சில மணி வாழ்வார்கள் என கூறப்பட்ட நோயாளிகளின் நோய் அடையாளம் தெரியாமல் காணாமற் போனது. மக்கள் அவர்களை பல ஆண்டுகள் வாழ்ந்து வந்ததைப் பார்த்தனர். மேலும் வழக்குகளில் சிக்கித் தவிப்பவர்கள் கிலா∴பத்தின் அருளால் அதிலிருந்து விடுதலை அடைந்தனர். சந்ததியில்லாதவர்களுக்கு சந்ததிகளின் அருள் கிடைத்தது. குறைமதியுடைய மாணவர்கள் முன்னேற்றத்தின் புதிய மைல் கற்களைக் கடக்க ஆரம்பித்தனர். சிறைப்பிடிக்கப்பட்டோர் எல்லா விதமான பிணைப்பிலிருந்தும் விடுதலை பெற்றனர். உதவியற்றோர் இயலாதவர்களுக்கு ஆற்றல் கிடைக்கப் பெற்றது. இது ஒரு நிலையான உறுதியான உண்மையாகும். கிலா∴பத்தின் இரசவாதக் கல்லுடன் இணைந்திருக்கக் கூடிய களிமண் பானை கூட வைரமாகி விடும். மரணித்தவர் உயிர் பெறுவார். அவரது வீட்டிலிருந்து தூரம் விலகியிருப்பவர் -களின் ஆன்மா எப்போதும் கொதிக்கின்ற பாலைவனம் மற்றும் காடுகளில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும். இது கலீ∴பாவை இறைவன்தான் உருவாக்குகிறான். அவனது தேர்ந்தெடுப்பில் எவ்வித குறைவும் இல்லை என்பதற்காகும். (2011 ஆம் ஆண்டு ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவு)

எகிப்தைச் சேர்ந்த கண்ணியத்திற்குரிய ம∴ரூப் ஸாபிருஸ் ஸய்யத் சாஹிப் அவர்களுடைய மனைவி, தான் அஹ்மதியத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் பற்றி கூறுகிறார்கள்: பைஅத்திற்குப் பிறகு எங்களது வாழ்க்கை முற்றிலுமாக மாறி விட்டது. முதல் முறையாக ஒரு ஜமாத்தினுடைய அங்கமாக இருக்கின்றேன் என்றும் அது ஓர் உடல் போன்று உள்ளது. அதன் ஆன்மாவாக அதனது இமாம் இருக்கின்றார் என்ற உணர்வு ஏற்பட்டது. நான் மிகுந்த ஆர்வத்தினால் இ-மெயில் மூலமாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு முதல் கடிதம் எழுதினேன். அதில் அஹ்மதியத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக எழுதி துஆவுக்காக விண்ணப்பித்திருந்தேன். ஹுஸூர் அவர்களின் பதில் எனது ஆன்மிக நோயிற்கு மருந்தாக இருந்தது. ஹுஸூர் அவர்களின் கடிதத்தில் எழுதப்பட்டிருந்த துஆக்களைப் படித்து எனது உணர்வு கண்ணீர் வடிவில் கண்களின் இமைகளில் மின்ன ஆரம்பித்தது. மேலும் எனக்கு இந்த ஹதீஸ் நினைவிற்கு வந்தது. அதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அதாவது நான் உங்களுக்கு சிறந்த தலைவர் மற்றும் மோசமான தலைவர் பற்றிக் கூறட்டுமா? உங்களின் சிறந்த தலைவர் யார் என்றால் நீங்கள் நேசிக்கக்கூடியவராக அவரும் உங்களை நேசிப்பவராக அவரும் இருப்பவர் தான். நீங்கள் அவருக்காக துஆ செய்யக்கூடியவர்களாகவும் அவர் உங்களுக்காக துஆ செய்பவராக இருப்பவரும் தான். இந்த எண்ணம் வந்ததுமே எனது ஒவ்வோர் அணுவிலிருந்தும் காலத்தின் கலீ∴பா அவர்களுக்கு கீழ்படிதல் மற்றும் அவருடன் அதீத அன்பு மற்றும் கொள்கை பிடிப்பு வெளிப்பட ஆரம்பித்தது. (அல் ∴பஸல் 27 மே 2011)

காலத்தின் கலீ∴பா அவர்களின் அருளினால் ஏற்படக்கூடிய ஆன்மிக அருளின் தாக்கம் பற்றி அஹ்மதியல்லாத ஒரு பெண்ணின் வார்த்தைகளையும் கேளுங்கள். Miss Kirah Hanemann காவல் துறையுடன் தொடர்புடையவர். தனக்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பாக கூறுகின்றார்கள்: நான் கலீ∴பாவுடைய ஹாலுக்கு சென்றபோது எனக்கு வெளிபடுத்த முடியாத ஓர் ஆன்மிக நிலை ஏற்பட்டது. இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களைக் கண்டதில் திருக்குர்ஆனின் போதனைகளின் அழகின் வெளிப்பாடு எனறு எனக்கு தோன்றியது. எனது வாழ்க்கையில் ஏதாவது ஒரு நபருடைய தாக்கம் ஏற்படுவது இது முதல் அனுபவம் ஆகும். ஆகையால் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் வலுவான தொடர்பு ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என நான் ஆசை கொள்கிறேன். அடுத்த ரமலான் மாதம் முழுவதும் உங்களுடன் கழிக்க முயற்சி மேற்கொள்வேன். இதன் மூலம் அந்த ஆன்மிக அனுபவத்தில் மேலும் உறுதிப்பாடு ஏற்பட வேண்டும். (அல் ∴பஸல் 21 ஜனவரி 2020)

எவர் இந்த விண்ணின் அருளை நிராகரிப்பரோ அவர்களுடைய நிலையைப் பற்றி யார் அறியாதவர்களாக இருக்கின்றனர். 5 சதவிகிதம் தான் கிலா∴பத்துடன் பைஅத் செய்துள்ளனர் என்று கூறியவர்கள். இன்று எங்கே சென்றனர்? அவர்களுக்கு கிலா∴பத்தை ஏற்றுக் கொண்டவர்களுடன் என்ன தொடர்பு இருக்கிறது? அவர்கள் தனது முயற்சியை அதன் எல்லை வரை எட்ட வைத்து விட்டனர். ஆனால் ஒவ்வொரு முயற்சியும் வீணாகவும் ஒவ்வொரு தந்திரமும் தோல்வியடைந்தும் விட்டது.

ஆக, கிலா∴பத்தின் பகைவர்களுக்கு ஏற்பட்ட இந்த மோசமான நிலை, எவர் கிலா∴பத்தினை மறுப்பரோ, கிலா∴பத்திலிருந்து தனது முகத்தை திருப்பிக் கொள்வாரோ, அவர் உலக ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் இழிவின் பாதாளத்தில் சென்று விழுவார் என்பதற்கு இது போதுமான சான்றாக இல்லையா?

நாம் சீர்திருத்தம் அடைய வேண்டும் என்று நமக்கு விருப்பமில்லையா? நமக்கு நமது ஆன்மா பரிசுத்தமாக இருக்க வேண்டும் என விருப்பமில்லையா? நமக்கு நமது ஒழுக்கம் மற்றும் ஆன்மிகத் தரம் நல்லதாக இருக்க வேண்டும் என விருப்பமில்லையா? நமக்கு இறைவனுடன் உறுதியான தொடர்பு இருக்க வேண்டும் என விருப்பம் இல்லையா? நமக்கு அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பு இருக்க வேண்டும் என, நமது இபாதத்துகளின் தரம் அல்லாஹ் விரும்புவது போன்று இருக்க வேண்டும் என நமக்கு விருப்பமில்லையா? நமது இரவும் பகலும் இறையச்சம் மற்றும் தக்வாவுடன் கழிக்க நமக்கு விருப்பமில்லையா? நமது சந்ததிகள் நமது உறவினர்கள் அன்பர்கள் இதே தரத்தை அடைய நமக்கு விருப்பம் இல்லையா? ஆம் நிச்சயமாக ஒவொருவரும் இவ்வாறு தான் விரும்புவார்கள். அப்படியென்றால் நீங்கள் இந்த தரத்தை அடைய விரும்புகின்றீர்கள் என்றால் அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நம்மிடத்தில் ஒரு வழி இருக்கிறது அது கிலா∴பத்துடன் இணைந்திருப்பதாகும். அதனை தவிர இந்த தரத்தை அடைய உலகில் வேறெந்த வழியும் இல்லை.

கிலா∴பத் இல்லாமல் இருப்போரின் நிலை மற்றும் அதனை மறுக்கக் கூடியவர்களின் நிலை நமக்கு தெரியும். ஆனால் அல்லாஹ் நம்மீது உபகாரம் செய்துள்ளான், நாம் கிலா∴பத்தின் நிழலின் கீழ் இரவு பகலாக ஆன்மீக முன்னேற்றத்தின் பால் முன்னேற முடியும். ஆனால் நாம் தூய்மை மற்றும் விசுவாசத்துடன் உண்மையான ரீதியில் கிலா∴பத்துடன் இணைந்திருப்பது இதற்கு அவசியமாகும். அல்லாஹ் இதற்கு நமக்கு வாய்ப்பளிப்பானாக.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வாறு மரத்துடன் இணைந்திருக்கும் கிளை தான் கனி தருமோ, வெட்டப்பட்ட கிளை கனி தராதோ, அவ்வாறே எவர் தன்னைத் தானே இமாமுடன் இணைத்து வைத்திருப்பரோ அவர்தான் இயக்கத்திற்கு பயனுள்ள பணியைச் செய்ய முடியும். எவர் ஒருவர் தன்னை இமாமுடன் இணைத்திருக்க மாட்டாரோ, அவர் உலக அறிவை எவ்வளவு கற்றிருந்தாலும் சரி ஒரு ஆட்டின் குட்டி வேலை செய்வதை கூட அவரால் செய்ய முடியாது. ஆக நீங்கள் முன்னேற்றம் அடைய விரும்புகின்றீர்கள் என்றால், உலகில் வெற்றியடைய வேண்டுமென்றால் உங்களுக்கு எனது அறிவுரை என்னவென்றால் எனது தூது செய்தி என்னவென்றால் நீங்கள் கிலா∴பத்துடன் இணைந்து விடுங்கள். இந்த அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாக பற்றிப்பிடியுங்கள். நமது அனைத்து முன்னேற்றத்தின் அடிப்படை கிலா∴பத்துடன் இணைந்திருப்பதில்தான் உள்ளது. (அல் ∴பஸ்ல் மே 23, 2003)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். நீங்கள் தக்வாவின்படி நிலைநின்றீர்கள் என்றால், உங்களுக்கு காலத்தின் கலீ∴பாவுடன் அன்பு மற்றும் விசுவாசத்திற்கான தொடர்பு இருக்குமென்றால், ஜமாஅத் அமைப்பு மற்றும் அஹ்மதிய்யா கிலா∴பத்தின் கண்ணியம் மற்றும் கட்டுப்படுதல் உங்களது உள்ளத்தில் இருக்குமென்றால் அல்லாஹ் திருக்குர்ஆனில் தனது மூ∴மின் அடியார்களுக்கு வழங்கி இருக்கக்கூடிய அந்த நிலையான அருட்களுக்கு எப்போதும் உரிமையுள்ளவர்களாக ஆகிவிடுவீர்கள். அதன் அருளினால் உலகமும் மார்க்கமும் சீராகிவிடும். உங்களுக்கு நிம்மதி கிடைக்கப் பெறும். அதன் அருளினால் உங்களது அச்சங்களை இறைவன் எப்போதும் அமைதியில் மாற்றி விடுவான். ஆனால் இதற்கு இபாதத் மற்றும் நல் அமல்கள் நிபந்தனையாகும். இதனை குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் காலத்தின் கலீ∴பா அவர்களின் குரலுக்கு எப்போதும் லெப்பைக் எனக் கூறுவதற்கு ஆயத்தமாக இருந்தீர்கள் என்றால் வெற்றி உங்களது பாதத்தை முத்தமிடும். மேலும் உலகம் மற்றும் மறுமையின் முன்னேற்றங்களால் நீங்கள் போர்த்தப்படுவீர்கள் - இன்ஷா அல்லாஹ். (ரிஸாலா அன்ஸாருல்லாஹ் கிலா∴பத் ஜூபிலி சிறப்பிதழ் 2008)

மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: தன்னைத் தானே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைத்தவாறு கிலா∴பத்திற்கு முழுமையான கீழ்படிதல் மிக அவசியமானதாகும். இதுதான் ஜமாஅத்தில் உறுதி மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையும். கிலா∴பத்தின் அடையாளம் மற்றும் புரிதல் ஜமாஅத்தில் எந்தளவு உருவாக்கி இருக்க வேண்டும் என்றால் காலத்தின் கலீ∴பாவின் ஒவ்வொரு தீர்ப்பையும் மகிழச்சியுடன் ஏற்றுக் கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும். எவ்விதமான தடையும் உள்ளத்தில் எழக்கூடாது. எந்த விஷயத்தையும் கேட்டு தடுமாறாக் கூடாது. காலத்தின் கலீ∴பாவுக்கு எல்லா நிலையிலும் கட்டுப்படுவது மற்றும் ஜமாஅத்திற்கு கீழ்படிவதில் ஒரு முக்கியத்துவம் உள்ளது. ஒவ்வொருவருக்கும் இதன் முக்கியத்துவம் தெரிந்திருக்க வேண்டும். (குத்பா ஜுமுஆ 31 ஜனவரி 2014)

கிலா∴பத்துடன் எவர் நெருக்கமான உறவை வைத்திருப்பாரோ அவர் வெறுங்கையுடையவராகவோ தேவையுடையவராகவோ இருப்பது சாத்தியமில்லை. கிலா∴பத்தின் கையைப் பிடித்திருப்பவர் ஒருபோதும் தனிமையானவர் அல்லர். இறைவன் அவருக்கு கஷ்டத்தில் உதவியாளனாக இருக்கின்றான்.

எந்தளவு இன்று காலத்தின் கலீஃபா அவர்களைப் பார்ப்பதற்கும், அவருடைய கருத்துக்களைக் கேட்பதற்கும் வாய்ப்பு கிடைக்கிறதோ இது போன்ற வாய்ப்பு மனித வரலாற்றில் எந்த நபி மற்றும் கலீஃபாவின் காலத்திலும் கிடைக்கவில்லை. ஆகையால் தற்போதும் நாம் நேரத்தை ஒதுக்கி MTA மூலமாக ஒளிபரப்பாகக் கூடிய காலத்தின் கலீஃபா அவர்களின் நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் செய்யவில்லை என்றால் இது இந்த மகத்தான அருளுக்கு அவமரியாதை ஆகும். இது நமக்கு சிந்திக்க வேண்டிய தருணமாகும்.

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)



## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

8

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### மூன்றாவது அத்தியாயம்

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

(அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் தொடங்குகின்றேன்) என்ற வசனம் தொடர்பான விளக்கவுரையின் தொடர்ச்சி....

இதன் விபரம் என்னவெனில், இறைஞானம் பெற்றவர்களின் பார்வையில் 'ரஹ்மானிய்யத்' என்ற பண்பின் உண்மைத்துவம் என்பது, 'ரஹ்மானிய்யத்' ஒவ்வோர் ஆன்மாவைக் கொண்டதும், மனிதன் மற்றும் மனிதன் அல்லாதவைக்காக நன்மையின் அருளை சென்றடைய வைப்பதாகும். அது எந்தவொரு முந்தைய செயலும் இல்லாமல் முற்றிலும் பேரருளின் வழியில் இருக்கிறது. மக்களில் எந்தவொரு வேலை செய்பவரின் வேலையுடனும் தொடர்பு இல்லாததாக இருக்கும் இவ்விதமான தூய பேரருள், நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்களைப் புகழ்வதன் பக்கமும், போற்றுதலின் பக்கமும், புகழுரையின் பக்கமும் ஈர்க்கின்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை; எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. எனவே அவர்கள் கலப்பற்ற தன்மைகளைக் கொண்டிராத உள்ளத்துடனும், நல்ல நிய்யத்துடனும் தனது பேரருள் புரிபவனைப் புகழ்கின்றனர்; போற்றுகின்றனர். இவ்வாறு சந்தேகம், ஐயம் ஆகியவற்றின் பக்கம் கொண்டு செல்லாத எந்தவொரு கற்பனையுமின்றி, رَحۡمٰن (ரஹ்மான் - அருள் செய்பவன்) என்பவன் நிச்சயமாக مُحَمَّد (முஹம்மது - புகழப்பட்டவன்) ஆகி விடுகிறான்.

ஏனெனில், மக்களுக்கு எவ்வித உரிமையுமின்றி பலவிதமான பேரருளைச் செய்கின்ற அப்படிப்பட்ட அருள் புரிகின்றவனை, அருட்கொடையும், கண்ணியமும் செய்யப்படுகின்ற ஒவ்வொரு நபரும் புகழ்வார். மேலும் இது மனிதப் படைப்பில் இருக்கும் சிறப்புப் பண்பாகும். பிறகு அருள்கொடையை நிறைவு செய்வதற்கு ஏற்ப حَمۡد (ஹம்து - புகழ்) என்பது தனது முழுமையை சென்றடைந்துவிடும்போது அது முழுமையான அன்பை ஈர்க்கக் கூடியதாக மாறி விடுகிறது. அத்தகைய பேரருள் செய்பவன் தன்னை நேசிப்பவர்களின் பார்வையில் مُحَمَّد (முஹம்மது - புகழப்பட்டவன்) ஆகவும், مَحۡبُوۡب (மஹ்பூப் - நேசிக்கப்பட்டவர்) ஆகவும் மாறி விடுகிறான். மேலும் இது ரஹ்மானிய்யத் பண்பின் விளைவு ஆகும்.

எனவே அறிவுடையவர்களைப் போன்று கவனியுங்கள்; சிந்தியுங்கள். இந்த இடத்தில், رَحۡمٰن (ரஹ்மான்) என்பவன் مُحَمَّد (முஹம்மது - புகழப்பட்டவன்) ஆவான்; مُحَمَّد (முஹம்மது - புகழப்பட்டவன்) என்பவன் رَحۡمٰن (ரஹ்மான்) ஆவான் என்பது இறைஞானம் பெற்ற ஒவ்வொருவருக்கும் தெளிவாகி விட்டது. சந்தேகமின்றி, (முஹம்மது, ரஹ்மான் ஆகிய) இரண்டின் விளைவு ஒன்றே ஆகும். எனவே எவர் மறுத்தாரோ அவர் உண்மையை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மேலும் رَحِیۡمِیَّت (ரஹீமிய்யத்) பண்பின் உண்மை நிலையையும், அதில் மறைந்துள்ள ஆன்மிக நிலையையும் பொருத்தவரை, அது பள்ளிவாயிலைச் சார்ந்தவர்களின் செயல்களுக்காக அருட்கொடையின், அபிவிருத்தியின் அருள் ஆகும். துறவிகளின் மடம் அல்ல. மேலும் கலப்பற்றதன்மை கொண்ட வேலை செய்பவர்களின் செயல்களை முழுமையாக்குவதும், நஷ்டத்திற்கான பரிகாரம் செய்பவர்கள், ஒத்தாசை செய்பவர்கள், உதவி செய்பவர்கள் ஆகியவர்களைப் போன்று அவர்களின் குறைவுகளை நீக்குவது நோக்கமாக இருக்கிறது. மேலும் சந்தேகமின்றி, இந்த அருள்பாலிப்பது என்பது ரஹீம் ஆகிய இறைவனை புகழ்வதன் பண்பில் அடங்கும். ஏனெனில் ஏதாவது செயல்படுகின்றவர் மீது, அவர் சரியான வழிமுறையில் (இறைவன் ஆகிய) அவனைப் புகழும்போதும், அவனது செயலின் மீது திருப்தி கொள்ளும்போதும், அவனை தனது எல்லா அருளுக்கும் உரிமையுடையவனாகக் காணும் போதும் மட்டுமே அவன் இந்த அருளை இறக்குகிறான்.

அவன் நிராகரிப்பவர்கள், இணைவைப்பவர்கள், பிறருக்குக் காட்டுபவர்கள், அகம்பாவம் கொண்டவர்கள் ஆகியோரின் செயலை ஒப்புக் கொள்வதில்லை என்பது உமக்குத் தென்படவில்லையா? மாறாக, அவர்களின் செயல்களை வீணாக்கி விடுகின்றான். மேலும் அவர்களுக்கு தன் பக்கம் வழிகாட்டுவதுமில்லை; அவர்களுக்கு உதவி செய்வதுமில்லை. மாறாக, அன்பு செலுத்துபவரும் உதவியாளருமில்லாத மக்களைப் போன்று அவர்களை விட்டு விடுகிறான். அவன் ஒருவருடைய வேலையில் திருப்தி கொண்டு விடும் நேரத்திலும், கருணை இறங்குவதற்குக் காரணமாக இருக்கின்ற அளவுக்கு அவனை முழுமையாக புகழும் நேரத்திலுமே அன்றி, அவன் எவர் பக்கமும் தனது

ரஹீமிய்யத்தின் பண்புடன் கவனம் செலுத்துவதுமில்லை; அவரது செயலை தனது உதவி ஒத்தாசையால் முழுமை செய்வதுமில்லை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

பிறகு தூய உள்ளம் கொண்டவர்களின் செயல்களின் முழுமையினால் அல்லாஹ்வின் புறமிருந்து حَمْدٌ (ஹம்து - புகழ்) முழுமை அடைந்து விடும்போது அல்லாஹ் أَحْمَدُ (அஹ்மது - மிக அதிகமாகப் புகழ்பவன்) ஆகி விடுகின்றான். அடியார் مُحَمَّدٌ (முஹம்மது - புகழப்படுபவர்) ஆகி விடுகின்றார். அனைவரையும் விட முதன் முதலில் முஹம்மது (புகழப்படுபவன்) ஆகவும், முதன் முதலில் அஹ்மது (நல்லவர்களை மிக அதிகமாகப் புகழ்பவன்) ஆகவும் இருக்கின்ற அந்த அல்லாஹ் தூயவன் ஆவான். அந்த நேரத்தில் கலப்பற்றதன்மையுடைய அடியார் (தனது) செயலின் காரணமாக இறை சந்நிதியில், مَحْبُوبٌ (மஹ்பூப் - நேசிக்கப்படுபவர்) ஆகி விடுகிறார். ஏனெனில் அல்லாஹ் தனது அர்ஷிலிருந்து அவரைப் புகழ்கின்றான். மேலும் அன்புக்குப் பிறகுதான் அல்லாஹ் ஒருவரை புகழ்கின்றான்.

சுருக்கம் என்னவெனில், رَحْمٰنِيَّت (ரஹ்மானிய்யத்) பண்பின் முழுமைத்தன்மை அல்லாஹ்வை مُحَمَّدٌ (முஹம்மது - புகழப்படுபவன்) ஆகவும், مَحْبُوبٌ (மஹ்பூப் - நேசிக்கப்படுபவன்) ஆகவும் ஆக்கி விடுகிறது. மேலும் அடியாரை أَحْمَدُ (அஹ்மது - மிக அதிகமாகப் புகழ்கின்றவர்) ஆகவும், مَحْبُوبٌ (மஹ்பூப் - நேசிக்கப்படுபவன்)-ஐத் தேடுகின்ற அத்தகைய مُحِبٌّ (முஹிப் - நேசிப்பவர்) ஆகவும் ஆக்கி விடுகிறது. மேலும் முழுமையான رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) என்பது அல்லாஹ்வை أَحْمَدُ (அஹ்மது அதிகமாகப் புகழக் கூடியவன்) ஆகவும், مُحِبٌّ (முஹிப் நேசிக்கக் கூடியவன்) ஆகவும் ஆக்கி விடுகிறது. மேலும் அடியாரை முஹம்மது (புகழப்படுபவர்) ஆகவும், மஹ்பூப் (நேசிக்கப்படுபவர்) ஆகவும் ஆக்கி விடுகிறது. இந்த இடத்திலிருந்து நீங்கள் மிக உயர்ந்த அந்தஸ்தையுடைய இமாம் ஆகிய நம் நபி (ஸல்) அவர்களின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

நிச்சயமாக அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு, முஹம்மது (புகழப்படுபவர்) என்றும், அஹ்மது (அதிகமாகப் புகழக் கூடியவர்) என்றும் பெயர் வைத்தான். மேலும் இந்த இரண்டு பெயர்களையும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கோ, கலீமுல்லாஹ் ஆகிய ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கோ அவன் சூட்டவில்லை. மேலும் அவன் தனது ரஹ்மான் மற்றும் ரஹீம் ஆகிய பண்புகளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மட்டுமே சேர்த்திருக்கிறான். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ்வின் மகத்தான அருள் இருக்கிறது.

மேலும் بِسْمِ اللهِ (பிஸ்மில்லாஹ்) என்பதில் (ரஹ்மான், ரஹீம் ஆகிய) இந்த இரண்டு பண்புகளையும் குறிப்பிடு -வதற்குக் காரணம், இந்த இரண்டு பண்புகளும் அல்லாஹ்வுக்கு اَلْإِسْمُ الْأَعْظَمُ (அல் இஸ்முல் அஃழம் - மகத்தான பண்பு) ஆக இருக்கிறது என்பதையும், இவ்விரண்டு பண்புகளும் நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு இறைவனிடம் இருந்து ஆடையாக (அதாவது சாயலாக) இருக்கின்றன என்பதையும் எல்லா மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமே ஆகும். நபி (ஸல்) அவர்களிடம் இருக்கின்ற, مَحْبُوبِيَّت (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப் -பட்டிருப்பது) என்ற பண்பைச் சுட்டிக்காட்டுவதற்காக அல்லாஹ் நபி (ஸல்) அவர்களின் பெயரை முஹம்மது (புகழப்படுகின்றவர்) என்று வைத்தான். மேலும் நபி (ஸல்) அவர்களிடம் இருக்கின்ற مُحِبِّيَّت (முஹிப்பிய்யத் - நேசம் கொள்வது) எனும் பண்பின் பக்கம் சுட்டிக் காட்டுவதற்காக நபி (ஸல்) அவர்களின் பெயரை அஹ்மது (மிகவும் அதிகமாகப் புகழ்பவர்) என்று வைத்தான்.

முஹம்மது (புகழப்பட்டவர்) என்பது எதற்காக என்றால், ஒருவர் நேசிக்கப்படுபவராக ஆகாத வரை, அவரை தனது குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளாத வரை புகழக்கூடிய எவரும் எவரையும் அதிகமாகப் புகழ முடியாது. மேலும் அஹ்மது (மிகவும் அதிகமாகப் புகழ்பவர்) என்பது எதற்காக என்றால், புகழ்கின்ற எவரும் ஒருவரிடம் அன்பு கொள்ளாத வரை, அவரை தனது குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளாத வரை எவரையும் அதிகமாகப் புகழ முடியாது. எனவே முஹம்மது (புகழப்பட்டவர்) என்ற பெயரில், கட்டாயமான சான்றாக مَحْبُوبِيَّت (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப் -பட்டிருப்பது) என்ற கருத்து காணப்படுகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மேலும் அவ்வாறே எல்லா அருள்கள், அருட்கொடைகளின் எஜமானாகிய அல்லாஹ்வின் புறமிருந்து அஹ்மது (மிகவும் அதிகமாகப் புகழ்பவர்) என்ற பெயரில் مُحِبِّيَّت (முஹிப்பிய்யத் - நேசம் கொள்வது) என்ற பொருள் காணப்படுகிறது. இதனால்தான் நமது நபி (ஸல்) அவர்களுக்கு முஹம்மது (புகழப்பட்டவர்) என்று பெயர் வைக்கப்பட்டது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனெனில் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை தனது பார்வையி -லும், ஸாலிஹுகளின் (நல்லவர்களின்) பார்வையிலும் மஹ்பூப் (நேசிக்கப்படக்கூடியவர்) ஆக ஆக்க நாடினான்.

மேலும் அவ்வாறே அவன் நபி (ஸல்) அவர்களின் பெயரை அஹ்மது (மிகவும் அதிகமாகப் புகழ்பவர்) என்று வைத்தான். ஏனெனில் அல்லாஹ் சுப்ஹானஹு நபி (ஸல்) அவர்களை தனது முஹிப் (நேசிக்கக் கூடியவர்) ஆகவும், அனைத்து நம்பிக்கை கொண்டவர்களையும், முஸ்லிம் -களையும் முஹிப் (நேசிக்கக் கூடியவர்) ஆகவும் ஆக்க விரும்பினான். நபி (ஸல்) அவர்கள் ஒரு மகத்துவத்தினால் முஹம்மது (அதிகமாக புகழப்படுகின்றவர்) ஆக இருக்கின்றார்கள் இன்னொரு மகத்துவத்தினால் அஹ்மது (அதிகமாக புகழக் கூடியவர்) ஆக இருக்கின்றார்கள். அவன் இந்த இரண்டு பெயர்களில் ஒரு பெயரை ஒரு காலத்திற்காக -வும், இன்னொரு பெயரை இன்னொரு காலத்திற்காகவும் சிறப்பாக்கி விட்டான். அந்த தூய (இறை)வன் دَنَا فَتَدَلّٰى (தனா ஃபததல்லா - அவர் (இறைவனுக்கு) மிக நெருக்கமாக மேலே சென்றார். பின்னர் அவர் மனித இனத்தை நோக்கி இறங்கினார்). மேலும் قَابَ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى (வகாப கவ்ஸைனி அவ்அத்னா - அவர் இரண்டு விற்களுக்குரிய ஒன்றுபட்ட நாணைப் போன்றவராக அல்லது அதை விடவும் மிக நெருக்கமானவராக ஆகி விட்டார்) என்ற தனது கூற்றில் இதன் பக்கமே சுட்டிக் காட்டியிருக்கிறான். (திருக்குர்ஆன் 53:9,10 காண்க).

ஆனால் மக்களால் பின்பற்றப்படுகின்றவரும், அல்லாஹ்வுக்கு மிகவும் அதிகமாக வணக்கம் செய்பவருமாக

இருக்கின்ற நபி கரீம் (ஸல்) அவர்கள் உலகத்தைத் காத்தோம்புபவனின் இந்த இரண்டு பண்புகளால் சிறப்பிக்கப்பட்டிருப்பது மக்களை ஷிர்க்கின் (இறைவனுக்கு இணைவைத்தலின்) பக்கம் சாய்த்து விடலாம் என்ற சிந்தனை தோன்றும் சாத்தியம் உருவாகி விடலாம் என்ற எண்ணம் தோன்றியபோது, எடுத்துக்காட்டாக, அப்படிப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில்தான், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வணங்கப்படக் கூடியவராக ஆக்கப்பட்டு விட்டார்கள் என்ற அப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட்டபோது, அல்லாஹ் அருள்பாலிக்கப்பட்ட இந்த உம்மத்தை, நிழலாக (முஹம்மது, அஹ்மது என்ற) இந்த இரண்டு பெயர்களுக்கு வாரிசாக்க வேண்டும் என விரும்பினான். இந்த இரண்டு உம்மத்திற்கு, தொடர்ந்து கொண்டிருக்கின்ற அருளைப் போன்று ஆகி விட வேண்டும் என்பதற்காகவும், இறை பண்புகளில் ஒரு சிறப்பான அடியாருக்கு இணை இருக்கிறது என்ற சந்தேகம் விலகுவதற்காகவும் அவன் அவ்வாறு விரும்பினான்.

எனவே அவன் சஹாபிகள் (ரழியல்லாஹு அன்ஹும்) அவர்களையும், அவர்களைப் பின்பற்றுபவர்களையும் رَحْمَانِيْ (ரஹ்மானீ - அருள் பாலித்தல்) மற்றும் جَلَالِيْ (ஜலாலீ - கம்பீரத்தை வெளிப்படுத்துதல்) எனும் மகத்துவதால் முஹம்மது (புகழப்பட்டவர்) என்ற பண்பின் தோற்றமாக ஆக்கினான். அவர்களுக்கு வெற்றியை அளித்தான். மேலும் தனது தொடர்ச்சியான அருள்களால் அவர்களுக்கு உதவி செய்தான். மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹை அஹ்மது (அதிகமாக புகழக்கூடியவர்) என்ற பண்பின் தோற்றமாக ஆக்கி விட்டான். மேலும் அவரை رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) மற்றும் جَمَالِيْ (ஜமாலி எனும் அழகிய) கம்பீரத்துடன் தோன்றச் செய்தான். மேலும் அவருடைய உள்ளத்தில் கருணையையும், நட்பையும் பதித்து விட்டான். மேலும் அவரை உயரிய சிறப்பான நல்லொழுக்கங்களால் அலங்கரித்தான். எனவே இவர்தான் அவர்கள் தர்க்கம் செய்து கொண்டிருக்கின்ற, உறுதிமொழி வழங்கப்பட்ட அந்த மஹ்தி ஆவார். ஆனால் அவர்கள் மிகத் தெளிவான அடையாளங்களைக் கண்டனர். ஆயினும் அவர்கள் நேர்வழி பெறவில்லை. அவர்கள் பொய்யில் பிடிவாதம் செய்து கொண்டிருக்கின்றனர்; உண்மையின் பக்கம் திரும்புவ-தில்லை. மேலும் இவர்தான் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார்; ஆனால் அவர்கள் அடையாளம் கண்டு கொள்வதில்லை. அவர்கள் அவரைப் பார்க்கின்றனர்; ஆனால் அகப்பார்வை உடைய கண்ணால் அல்ல.

ஏனெனில், ஈஸாவின் பெயரும் அஹ்மது என்ற பெயரும் அசல் தன்மையைப் பொருத்தவரை ஒன்றிணைந்த-வையாக இருக்கின்றன. மேலும் இயல்பைப் பொருத்தவரை ஒன்றுக்கொன்று ஒத்தவையாக இருக்கின்றன. மேலும் தரத்தைப் பொருத்தவரை இவ்விரண்டும் جَمَالْ (ஜமால் - அழகு) மற்றும் சண்டையை விட்டு விடுவது என்ற அம்சத்தைக் குறிப்பிடுகிறது. ஆனால் مُحَمَّدْ முஹம்மது என்ற பெயர் قَهْرِيْ (கஹ்ரீ - வலிமையானது) மற்றும் جَلَالِيْ (ஜலாலீ - கம்பீரமானது) ஆகிய பெயர் ஆகும். மேலும் இவை இரண்டும் رَحْمٰنْ (ரஹ்மான்) மற்றும் رَحِيْمْ (ரஹீம்) என்பதன் நிழல்களைப் போன்றவையாகும். முஹம்மதிய்யத் என்பதன் உண்மை நிலையின் ஊற்றாக இருக்கின்ற ரஹ்மான் என்ற பெயர், مَحْبُوْبِيَّتْ (மஹ்பூபிய்யத் - நேசம் கொள்ளப்படுபவனாக இருப்பது) என்பதன் கம்பீரத்திற்குத் தேவையுடைதாக இருப்பதைப் போன்றே, جَمَالْ (ஜமால் - அழகு) என்பதற்கும் தேவை உடையதாக இருக்கிறது என்பதை நீர் காணவில்லையா? அல்லாஹ் பசு, ஆடு, ஒட்டகம், கோவேறு கழுதை, ஆடுகள் ஆகிய எல்லா உயிரினங்களையும் மனிதனின் தொண்டிற்காகப் படைத்திருப்பது அவனுடைய ரஹ்மானிய்யத் தானே! மேலும் அவன் மனிதனுடைய உயிரின் பாதுகாப்பிற்காக மிகவும் இரத்தம் சிந்தியிருக்கிறான். இதுதானே جَلَالِيْ (ஜலாலீ - இறை கம்பீரத்தின்) விஷயமாகும். மேலும் ரஹ்மான் ஆகிய இறைவனின் ரஹ்மானிய்யத்தின் விளைவு ஆகும்.

எனவே ரஹ்மானிய்யத் என்பது ஆற்றலையும் கம்பீரத்தையும் எதிர்பார்க்கிறது. இருப்பினும் இது مَحْبُوْبٌ (மஹ்பூப் - நேசம் கொள்ளப்படுகின்றவன்), தான் அருள் புரிய விரும்பும் அந்த நபர் மீது செய்யும் பரிவும், கருணையும் ஆகும் என்பது நிரூபணமாகிறது. மனிதனுக்காக அழிக்கப்படுகின்ற தண்ணீரிலும், காற்றிலுமுள்ள எத்தனை புழுக்கள் இருக்கின்றன? மேலும் எத்தனை கால்நடைகள் ரஹ்மான் ஆகிய இறைவன் புறமிருந்து மக்களுக்காக அருளாக அறுக்கப்படுகின்றன? எனவே சுருக்கமாக, சஹாபிகள் உண்மையில் ஜலாலிய்ய தன்மையைக் கொண்ட முஹம்மதிய்யா (முஹம்மதிய்யாவின் அழகான பண்பு) என்பதன் தோன்றமாக விளங்கினார்கள். இவ்வாறு (சஹாபிகள் ஆகிய) அவர்கள் மற்றவர்களை வழிகேடு, வழிதவறிச் செல்வது ஆகியவற்றின் சிறைப்பிடிப்பிலிருந்து விடுதலை அளிப்பதற்காகவும், அவர்களை சமாதானம், நேர்வழி ஆகியவற்றின் பக்கம் கொண்டு வருவதற்காகவும் விலங்குகளையும், காட்டு உயிரினங்களையும் போன்று இருந்த அந்த சமுதாயத்தை கொலை செய்ததற்கு இதுவே காரணமாகும்.

முஹம்மதிய்யத்தின் உண்மை நிலை என்பது ரஹ்மானிய்யத்தின் உண்மை நிலையின் தோற்றமாகும் என்பதை நீர் நன்றாக அறிந்து விட்டீர். மேலும் اِحْسَانْ (இஹ்ஸான் - பேரருள் செய்தல்) جَلَالْ (ஜலால் - கம்பீரத்தை வெளிப்படுத்துதல்) ஆகிய பண்புக்கிடையில் எந்த வித்தியாசமும் இல்லை. மாறாக, ரஹ்மானிய்யத் என்பது இறைவனின் கம்பீரமான, மேலாண்மை கொண்ட நிறைவான தோற்றமாகும். மேலும் ரஹ்மானிய்யத்தின் உண்மை நிலை என்பது, உயர்வானதற்காக அற்பமானதை தியாகம் செய்யப்படுவதைத் தவிர வேறொன்றும் இல்லை. மனிதன் மற்றும் அவனைத் தவிர மற்ற படைப்பினங்களையும் படைப்பதற்கு முன்னர் ரஹ்மானின் இந்த சுன்னத்தே (நடைமுறையே) இருந்து வருகிறது. ஒட்டகங்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஒட்டகங்களின் காயங்களிலுள்ள புழுக்கள் எவ்வாறு அழிக்கப்படுகின்றன என்பதையும், மக்கள் ஒட்டகங்களின் இறைச்சியிலிருந்து பயன்பெறுவதற்காக ஒட்டகங்களே அறுக்கப்படுவதையும், அவற்றின் தோலினால் கண்ணுக்கு அழகாகத் தெரியும் அழகிய ஆடை உருவாக்கப்படுவதையும் நீர் பார்க்கவில்லையா? மேலும் இவை அனைத்தும் மனிதனின், உயிரினங்களின் தொடரைப்

பாதுகாப்பதற்காக ரஹ்மானிய்யத்தின் மகத்துவம் ஆகும். பிறகு எவ்வாறு ரஹ்மான் مَحْبُوْبٌ (மஹ்பூப் - நேசிக்கப்படக் கூடியவன்) ஆக இருக்கிறானோ, அவ்வாறே அவன் جَلَال (ஜலால் - கம்பீரம்) என்பதற்கான தோற்றமாகவும் இருக்கிறான். மேலும் அந்த முழுமைத்தன்மையில் அப்படியே முஹம்மது என்ற பெயரும் அடங்கியிருக்கிறது. பின்னர் وَهَّابٌ (வஹ்ஹாப் - வாரிவழங்குபவன் ஆகிய) இறைவனிடம் இருந்து கண்ணியத்திற்குரிய சஹாபிகள் (ரலியல்லாஹு அன்ஹும்) அவர்கள் முஹம்மது என்ற பெயருக்கு வாரிசானபோது, அல்லாஹ்வின் جَلَال (ஜலால் - கம்பீரம்) என்ற பண்பை வெளிப்படுத்தினர் அவர்கள் அநீதி செய்பவர்களை கால்நடைகளைப் போன்றும், விலங்குங்களைப் போன்றும் கொன்றனர். அவ்வாறே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) மற்றும் جَمَال (ஜமால்) என்பதன் தோற்றமாக இருக்கும் اَحْمَدُ (அஹ்மது) என்ற பெயருக்கு வாரிசானார்.

மேலும் அல்லாஹ் அவருக்காகவும், அவரைப் பின்பற்றுபவர்களுக்காகவும், அவருடைய குடும்பத்தினரைப் போன்று இருக்கின்ற அனைவருக்கும் இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தான். எனவே அல்லாஹ்வின் கூற்றாகிய, وَاٰخَرِيْنَ مِنْهُمْ (வ ஆகரீன மின்ஹும்) என்பது நிறைவேறும் பொருட்டு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தனது ஜமாஅத்துடன் அல்லாஹ்வின் பண்பாகிய رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) மற்றும் اَحْمَدِيَّتْ (அஹ்மதிய்யத்) என்பதன் தோற்றமாக இருக்கிறார்.*

மேலும் நபித்துவத்தின் தோற்றங்களின் உண்மைத் தன்மை முழுமையடையும் பொருட்டு இறைவனின் விருப்பங்களை எவராலும் தடை செய்ய முடியாது. மேலும் இதுவே முஹம்மது, அஹ்மது மற்றும் அவர்களின் இனி வரும் தோற்றங்களைக் குறிப்பிடும் பொருட்டு பிஸ்மில்லாஹ் என்பதுடன் ரஹ்மானிய்யத் பண்பும், ரஹீமிய்யத் பண்பும் தனிச்சிறப்பாகக் கூறப்பட்டிருப்பதற்கான காரணம் ஆகும். அதாவது இது சஹாபிகள் (ரலியல்லாஹு அன்ஹும்) மற்றும், ரஹீமிய்யத், அஹ்மதிய்யத் ஆகிய ஆடைகளில் வரக் கூடிய அல்லாஹ்வின் அந்த மஸீஹ் பற்றியது ஆகும்.

இப்போது நாம் بِسْمِ اللّٰہِ (பிஸ்மில்லாஹ்) என்பதற்கான விளக்கவுரையின் சுருக்கத்தை மீண்டும் எடுத்துரைக்கிறோம். அல்லாஹ் என்ற பெயர் اِسْمٌ جَامِدٌ (இஸ்முன் ஜாமிதுன்) - பகுக்க முடியாத பெயர் அல்லது இடுகுறிப்பெயர் ஆகும்). அதன் உண்மையான பொருளை மிக்க அறிந்தவனும், நன்கு தெரிந்தவனும் ஆகிய அல்லாஹ் மட்டுமே அறிவான். அல்லாஹ் عَزَّ اِسْمُهٗ (அஸ்ஸ இஸ்முஹு - அவன் பெயர் கண்ணியத்துக்குரியது) என்பவன் இந்த பெயரின் உண்மை நிலையை இந்த வசனத்தில் கூறியிருக்கிறான். மேலும் அல்லாஹ் என்பவன் رَحْمٰنِيَّتْ (ரஹ்மானிய்யத்) மற்றும் رَحِيْمِيَّتْ (ரஹீமிய்யத்) ஆகிய பண்புகளை ஒருங்கே கொண்டவன் ஆவான். அதாவது பேரருள் புரியும் பண்பைக் கொண்ட ரஹ்மத் (அதாவது கருணை) ஈமானின் நிலைமை -யுடன் தொடர்புடைய ரஹ்மத்துடன் இணைந்ததாகும். மேலும் இந்த இரண்டு ரஹ்மத்துகளும் ருபூபிய்யத்தின் ஊற்றிலிருந்து வெளிவரும் தூய தண்ணீரையும், இன்பமான உணவையும் போன்றவையாக இருக்கின்றன. மேலும் இந்த இரண்டு பண்புகளைத் தவிர மற்ற அனைத்து பண்புகளும் இந்த பண்புகளின் கிளைகள் ஆகும்.

(தொடரும்...)

*அவர்களைத் தவிர இன்னொரு சமுதாயத்திலும் அவன் அவரை அனுப்புவான். (திருக்குர்ஆன் 62:4) - மொழிபெயர்ப்பாளர்.

*(15 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பெண்களைக் கருணையுடனும் மென்மையுடனும் நடத்த வேண்டும்.

ஒருமுறை, ஒரு நண்பரின் கடுமையான இயல்பு மற்றும் மோசமான வார்த்தைகள் பற்றிப் பேசப்பட்டது. மேலும் அவர் தனது மனைவியிடம் கடுமையாக நடந்து கொண்டதாக புகார் கூறப்பட்டது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் வருத்தமடைந்தார்கள். ஆழ்ந்த கவலைக்கு உள்ளானார்கள். மிகுந்த கோபத்துடன் கூறினார்கள்:

நம் நண்பர்கள் இப்படி இருக்கக் கூடாது.

ஹுஸூர் அவர்கள் பெண்களின் சமூகத்தைப் பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டே இருந்தார்கள். இறுதியில் அவர்கள் கூறினார்கள்: என் நிலைமை என்னவென்றால், ஒருமுறை நான் என் மனைவியை சத்தமாக அதட்டியபோது, அந்த சத்தம் என் இதயத்தின் துயரத்துடன் கலந்து இருந்தாகவே நான் உணர்ந்தேன், மறுபுறம் என் வாயிலிருந்து எந்த புண்படுத்தும் அல்லது கடுமையான வார்த்தைகளையும் சொல்லவில்லை. மனைவியின் மீதான இந்த கடுமையின் விளைவாக ஏதேனும் இறைசோதனை வந்து விடாதிருக்க அதன் பிறகு நான் நீண்ட நேரம் பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருந்தேன். மிகுந்த பணிவுடனும் உருக்கத்துடனும் நஃபில்களைத் தொழுதேன். மேலும் சில தர்மங்களையும் செய்தேன். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 307)

எனவே, நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் அடிச்சுவடைப் பின்பற்றிய ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் செயல்கள் மூலம், இன்றைய காலகட்டத்தில் மனைவிகளை நல்ல முறையில் நடத்துவதற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும். அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் நம் வீடுகளில் அமைதியை நிலைநாட்ட முடியும். மேலும், நம் திருமண வாழ்க்கையை சொர்க்கத்தைப் போல மாற்ற முடியும்.

இந்தக் காலத்தில் மார்க்கத்தை உயிர்ப்பிக்கவும், ஷரீஅத்தை நிலைநாட்டவும் அல்லாஹ் சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். நாம் நமது சுற்றத்தை சொர்க்கமாக மாற்ற வேண்டும் என்றால் திருமணம் தொடர்பாக அவர்கள் நமக்கு வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் கலீஃபாக்களால் வழங்கப்படும் வழிகாட்டல்களை நாம் பின்பற்ற வேண்டும்.

திருக்குர்ஆனின் கட்டளைகளையும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளையும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் அறிவுறுத்தல் -களையும் பின்பற்றும் நல்வாய்ப்புகளை எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக என்று பிரார்த்திக்கிறேன். எல்லாப்புகழும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியது.

# திருமண வரன், திருமணம், குடும்ப விஷயங்கள் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் கூற்றுகள்

★ ★ ★ *முஸஃப்பர் அஹ்மத் நாஸிர் (நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத், காதியான்)* ★ ★ ★

**தமிழாக்கம்: மவ்லவி M. ஷாஜஹான்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

### ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களின் வார்த்தைகளில் இருந்து மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு சில வழிகாட்டும் போதனைகள்

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் (ரலி) அவர்கள் தனது மூத்த மகள் ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபாவிற்கு அறிவுரை வழங்கும்போது, அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

உங்கள் கணவரிடமிருந்து மறைக்கப்பட்ட எதையும் செய்யாதீர்கள் அல்லது உங்கள் கணவரிடமிருந்து மறைக்க வேண்டிய அவசியத்தை நீங்கள் உணரும் எதையும் செய்யாதீர்கள். கணவர் அதைப் பார்க்காமல் இருக்கலாம்; ஆனால் இறைவன் அதைப் பார்க்கிறான். இறுதியில் விஷயம் வெளிப்பட்டு, பெண் தனது கண்ணியத்தை இழக்கிறாள். அவள் தன் மரியாதையையும் கண்ணியத்தையும் இழக்கிறாள். தன் கணவரின் விருப்பத்திற்கு எதிராக ஏதேனும் செயல் செய்யப்பட்டால், அதை ஒருபோதும் மறைக்க வேண்டாம். தெளிவாகக் கூறி விடுவதில் கண்ணியம்உள்ளது. அதை மறைப்பது இறுதியில் அவமானம் மற்றும் அவமதிப்புக்கு வழி வகுக்கும். பெண்ணின் கண்ணியம் விழுந்து விடுகிறது. உங்கள் கணவர் கோபமாக இருக்கும்போது ஒருபோதும் பேசாதீர்கள். அவர் குழந்தை அல்லது வேலைக்காரனிடம் கோபமாக இருந்தால், உங்கள் கணவர் உண்மையின் பக்கம் இல்லை என்று உங்களுக்குத் தெரிந்தாலும், உங்கள் கணவர் கோபமான நிலையில் ஒரு குழந்தையைத் திட்டினால் அல்லது வேறொருவரிடம் ஏதாவது சொன்னால், அவர் ஏதாவது தவறு செய்கிறார் என்பதை நீங்கள் தெளிவாகக் கண்டால், அந்த நேரத்தில் அவருக்கு முன்னால் பேசாதீர்கள். கோபத்தில் ஓர் ஆணுடன் வாக்குவாதம் செய்யும் ஒரு பெண் தன் மரியாதையை இழக்கிறாள். பெரும்பாலான சண்டைகள் பொறுமையின்மையால் ஏற்படுகின்றன. ஏனென்றால் நீங்கள் உடனடியாக எதிர்வினையாற்றுகிறீர்கள். சண்டைகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. நீங்கள் கோபத்தில் அவரை குறுக்கிட்டால் அப்போது அவர் ஏதாவது சொன்னால் உங்களுக்கு கண்ணியக்குறைவு ஏற்பட்டு விடும். பின்னர், உங்கள் கணவரின் கோபம் தணிந்தவுடன், நிதானமாக அவரின் தவறை சுட்டிக் காட்ட வேண்டும்.

உங்கள் கணவரின் உறவினர்களையும், அந்த உறவினர்களின் குழந்தைகளையும் உங்கள் சொந்தக்காரர்களாகக் கருத வேண்டும். ஒருவர் மற்றவரின் இரத்த உறவுகளை தம் உறவினராகக் கருத வேண்டும்.



எவருக்கும் தீயது நினைக்காமல் இருக்க வேண்டும். யாராவது உங்களுக்கு தீமை செய்தாலும் கூட, உங்கள் இதயத்தில் அனைவருக்கும் நலனை விரும்ப வேண்டும். யாராவது உங்களுக்கு தீமை செய்யலாம்; ஆனால் உங்கள் இதயத்தில் யாருக்கும் தீமை செய்யும் எண்ணம் வரக் கூடாது. ஒருபோதும் உங்கள் செயல்களால் தீமைக்குப் பழிவாங்காதீர்கள். பிறகு பாருங்கள்! இறைவன் எப்போதும் உங்களுக்கு நல்லது செய்வான். (குடும்பப் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தீர்வுகள் பக்கம் 188)

### குடும்ப வாழ்க்கையில் அன்பு மற்றும் பாசத்தின் முன்மாதிரிக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய எடுத்துக்காட்டு

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் ஹஸ்ரத் அம்மா ஜான் ஆகியோரின் திருமண வாழ்க்கை அன்பு, பாசம் மற்றும் சொர்க்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் கூறுகையில், ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் (அம்மா ஜான்) மீது கோபமாக இருப்பதை நான் ஒருபோதும் பார்த்ததில்லை; கேட்டதில்லை. மாறாக, ஒரு சிறந்த தம்பதியினர் எப்படி இருக்க வேண்டும் என்பதை நான் எப்போதும் பார்த்திருக்கிறேன். (சீரத் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா, பக்கம் 231)

ஹஸ்ரத் அம்மா ஜான் கூறுகிறார்கள்: "நான் முதன் முதலில் டெல்லியிலிருந்து வந்தபோது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெல்ல பாச்சோறு விரும்புவார்கள் என்பதை அறிந்தேன். எனவே மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இனிப்பு அரிசியை சமைக்க ஏற்பாடு செய்தேன். நான் சிறிது சோற்றை வாங்கி அதில் நான்கு மடங்கு வெல்லம் சேர்த்தேன். அதனால் குழைந்து போனது. நான் அடுப்பிலிருந்து சட்டியை இறக்கி ஒரு பாத்திரத்தில் சோறு எடுத்தபோது, அது வீணாகிப் போனதைக் கண்டு நான் மிகவும் சோகமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தேன். சாப்பிட வேண்டிய நேரம் இது. இப்போது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் ஹஸ்ரத் சாஹிப் வந்தார்கள். துக்கத்தா -லும் அதிர்ச்சியாலும் சூழப்பட்ட என் முகத்தைப் பார்த்தார்கள். அன்னார் என்னைப் பார்த்து, புன்சிரித்தவாறு நன்றாக சமைக்கப்படாதது பற்றிய கவலையா? என்று கேட்டார்கள். பின்னர் அன்னார், 'இல்லை! இவை மிகவும் நன்றாக இருக்கிறது, என் ரசனைக்கேற்ப சமைக்கப்பட்டிருக்கின்றது. எனக்கு வெல்லம் அதிகம் உள்ளவை பிடிக்கும் எனக் கூறி மிகுந்த மகிழ்ச்சியுடன் சாப்பிட்டார்கள். ஹஸ்ரத் சாஹிப் என்னை மகிழ்விக்க பல விஷயங்களைச் சொன்னதால் எனது உள்ளமும் மகிழ்ச்சி அடைந்தது என ஹஸ்ரத் அம்மா ஜான் கூறினார்கள். (சீரத் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா பக்கம் 225)

### மகிழ்ச்சியான மற்றும் வெற்றிகரமான குடும்ப வாழ்க்கைக்கு காலத்தின் கலீ∴பா அவர்களின் முன்மாதிரி

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பதுல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் மனைவி ஹஸ்ரத் சய்யிதா அமத்துஸ் ஸபூஹ் சாஹிபா, (சல்லமஹுல்லாஹ்) கூறுகிறார்கள்:

ஹுஸூர் அன்வர் அவர்களின் வாழ்க்கை கிலா∴பத்துக்கு முன்பும் மார்க்க சேவைக்காக அர்ப்பணிக்கப் -பட்டிருந்தது. அவர்களின் இரவு பகல் முழுவதுமாக மார்க்க நடவடிக்கைகளில் கழிந்தது. ஹுஸூர் அவர்களுக்காக என் இதயத்தில் கண்ணியத்தை ஏற்படுத்திய முதல் விஷயம் என்னவென்றால், ஹுஸூர் அவர்கள் எந்த விஷயத்திலும் சுயநலத்தைக் காட்டியதில்லை. அவர்களுக்கு மார்க்கப் பணிகள் அதிகம் இருந்த போதிலும், அவர்கள் எப்போதும் என்னையும் குழந்தைகளையும் தன்னால் முடிந்தவரை கவனித்துக் கொண்டார்கள். கானாவில் எப்போதும் தண்ணீர் பஞ்சம் இருந்தது. ஹுஸூர் அவர்கள் காலையில் வாளிகளில் இருந்து தண்ணீர் நிரப்புவார்கள். எவ்வளவு முக்கியமான வேலையாக இருந்தாலும், நான் இன்று பிஸியாக இருக்கிறேன்; அதை நீங்களே நிரப்புங்கள் என்று அவர்கள் என்னிடம் கூறியதில்லை... வீட்டின் அன்றாட நிகழ்வுகள் கிலா∴பத்துக்கு முன்பு இருந்தது போலவே இப்போதும் உள்ளது. உணவில் ஒருபோதும் குறைகளைக் கூறியதில்லை. ஒருமுறை நான் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன்... ஹுஸூர் அவர்கள் முதலில் எனக்காக காலை உணவைத் தயாரித்து எனக்குக் கொடுத்தார்கள். பின்னர் தனக்கு காலை உணவைத் தயாரித்த பிறகு அலுவலகத்திற்குச் சென்றார்கள். (மாதாந்திர இதழ் தஷ்ஹீதுல் அஸ்ஹான் செப்டம்பர், அக்டோபர் 2008)

ஹுஸூர் அன்வர் அவர்களின் பத்திரிகைச் செய்தித் தொடர்பாளர் மதிப்பிற்குரிய ஆபித் கான் சாஹிப் கூறுகிறார்கள்: ,

ஒருநாள் நான் என்மனைவியுடன் மஸ்ஜித் ∴பஸ்லைக் கடந்து சென்று கொண்டிருந்தேன். மறுநாள் நான் ஹுஸூர் அவர்களைச் சந்தித்தேன். அப்போது அவர்கள், நீங்கள் உங்கள் மனைவியுடன் நடந்து செல்லும்போது மஸ்ஜிதின் ஜன்னலிலிருந்து உங்களைப் பார்த்தேன். நீங்கள் சற்று முன்னால் நடந்து சென்று கொண்டிருந்தீர்கள். ஆனால் நீங்கள் ஏன் அஹ்மதி அல்லாத மவ்லவியைப் போல உங்கள் மனைவிக்கு முன்னால் நடந்து சென்றீர்கள்? நீங்கள் அவர்களுடன் சேர்ந்து நடந்து செல்ல வேண்டும் என்று கூறினார்கள்.



இறைவன் எவ்வளவு அன்பான இமாமை வழங்கியுள்ளான். நாம் எவ்வளவு பாக்கியவான்கள். கணவன் மனைவிக்கு இடையேயான மிக நீண்ட விரிசல் ஒரு பக்கம் இருக்கட்டும், கணவன் மனைவிக்கு இடையே ஓர் அடி தூரம் இருப்பது கூட அவர்களுக்கு வேதனை அளிக்கிறது.

### கலீ∴பாவுடனான தனிப்பட்ட தொடர்பு மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு வழியாகும்

ஒருவருக்கொருவர் கோபம் கொண்டிருந்த கணவன் மனைவி, கலீ∴பாவின் அருளுக்குரிய சந்திப்பிற்காக வந்தபோது, ஹுஸூர் அன்வர் அவர்களின் ஒப்பற்ற அன்பு, கவனம் மற்றும் பிரார்த்தனைகளால் அவர்களின் அனைத்து வெறுப்புகளும் நிரந்தரமாக முடிவுக்கு வந்தன.

எனவே, கலீ∴பாவிற்குக் கீழ்ப்படிதல் மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் அன்பு நேசம் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட அந்த உறவுகள் ஒருபோதும் முறிவதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வெற்றிகரமான, அமைதியான மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை அடைய, ஒருவர் காலத்தின் கலீ∴பாவுடனான தனது தனிப்பட்ட உறவை வலுப்படுத்த வேண்டும். நாமும் நமது சந்ததிகளும் அவர்களின் நெருக்கத்தைப் பெறுவது அவசியமாகும். இது MTA குத்பா நேரடி ஒளிபரப்பு, மஜ்லிஸே இர்∴பான் சந்திப்பு, கலீபா அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுதல் மேலும் துஆவுக்காக கடிதம் எழுதுதல் மற்றும் கிலா∴பாத் உறுதிபாட்டிற்காக நாமும் துஆவில் ஈடுபடுவதின் மூலமாக பலப்படுத்தப்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பெண்களின் வெட்கக் கேடான செயலைத் தவிர, மற்ற எல்லாக் குறைகளையும் கசப்பையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: ஆண்களாக இருந்து பெண்களுடன் சண்டையிடுவதை நாம் வெட்கமற்றதாகக் காண்கிறோம். இறைவன் நம்மை ஆண்களாகப் படைத்துள்ளான். உண்மையில் இது நம்மீதான அருள்கொடை ஆகும். அதற்கு நன்றி செலுத்துவது என்னவென்றால், நாம்

*(தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...)*

8

# பராஹீனே அஹ்மதிய்யா

பாகம் 2
தொகுதி 1

தமிழாக்கம்:
ஜோதி அருள்குமார் ஆஸ்டின்

## ஒரு முக்கியமான தவிர்க்க முடியாத கோரிக்கை

இயற்கையான மனித பலவீனங்கள் நாம் ஒரு சமுதாயத்தின் ஓர் அங்கமாக வாழ்வதையும், மேலும் பரஸ்பரம் ஒத்துழைப்பை நாடுபவர்களாகவும் அதனை வளர்ப்பவர்களாகவும் இருக்கும்படியாக நிர்பந்திக்கின்றது. இந்த உண்மை தெள்ளத்தெளிவாக தெரிவதால் நியாய உணர்வுள்ள எவறும் இதனை மறுக்க மாட்டார். நமது உடலின் பல பாகங்களின் கூட்டு அமைப்பானது, பரஸ்பர ஒத்துழைப்பின் தேவையை போதுமான அளவிற்கு நிரூபிக்கின்றது. நமது கைகள், பாதங்கள், செவிகள், கண்கள் மற்றும் மூக்கு போன்ற உள்ளான மற்றும் வெளிப்படையான உறுப்புகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று ஒத்திசைந்து பணி புரியும்படி வடிவமைக்கப்பட்டுள்ளன. அவைகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பு இல்லாமல் போகும் பட்சத்தில் சராசரி மனித செயல்பாடு சாத்தியமற்றதாகி விடும். மேலும் நமது மொத்த சரீரமும் செயலிழந்து போய்விடும். இரு கைகளும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு செயலை ஒரு கையை மட்டும் வைத்து செய்ய இயலாது. மேலும் இரு கால்களால் பயணிக்க வேண்டிய பாதையில் ஒரு காலை மட்டும் வைத்து பயணிக்க இயலாது.

அது போன்று நமது அனைத்து வெற்றிகளும், அவை இம்மையையோ மறுமையையோ சார்ந்து இருப்பினும் மற்றவர்களின் உதவி மற்றும் ஒத்துழைப்பை சார்ந்தே இருக்கின்றது. எந்த ஒரு மனிதராலும் பௌதிக மற்றும் ஆன்மிக விஷயங்களில் தன்னந்தனியாக அவர் ஒருவரே ஏதேனும் சாதித்து விட முடியுமா? நிச்சயமாக இயலாது. ஒத்த நோக்கம் கொண்டவர்கள், ஒன்று சேர்ந்து செயலாற்றி, தமது இலக்கை அடைகின்றனர். ஒட்டுமொத்த மனித சமுதாயத்திற்கு நன்மை பயக்கக் கூடிய மாபெரும் விஷயங்களுக்கு இக்கோட்பாடு இன்னும் அதிக நிதர்சனமாக உள்ளது. அவைகளை தன்னந்தனியாக யாருடைய ஒத்துழைப்பும் இன்றி செய்து முடிப்பது இயலாது. இறை நம்பிக்கையில் முழு மனித குலத்தையும் மிஞ்சிய இறைத்தூதர்களும் (அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக), இறைவனுக்கான பணிகளை நிறைவேற்றுதல், நேர்மைக்காக போராடுதல் போன்ற இறைப்பணிகளில் தங்களை அர்ப்பணித்த இறைத்தூதர்களும் இந்த இயற்கை கோட்பாட்டின் அடிப்படை -யிலேயே مَنْ اَنْصَارِيْۤ اِلَى اللّٰهِ அதாவது, இறை வழியில் எனக்கு உதவியாளர்கள் யார்? எனக் கூறினார்கள். (61:15)

இறைவனும் மனிதர்களுக்குறிய இந்த இயற்கையான தேவைகளை குறித்து தனது வேதத்தில் கட்டளையிட்டபடி تَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى நேர்மையிலும் இறையச்சத் -திலும் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள் (5:3) என உறுதிப்படுத்தி உள்ளான்.

ஆயினும் வருந்தத்தக்க வகையில் பெரும்பாலான முஸ்லிம்கள் இந்த அருளுக்குரிய இறைகட்டளையை மறந்து விட்டனர். மார்க்கத்தின் வெற்றியும் எதிர்காலமும் எந்த அடிப்படைக் கோட்பாட்டை சார்ந்துள்ளதோ அதனையே முற்றிலும் கைவிட்டு விட்டனர். ஆயினும் பிற மதத்தவர்கள் தங்களது வேதங்களில் பெரிய அளவில் வலியுறுத்தப்படா -திருந்தும் இந்த ஒத்துழைப்பு குறித்த கோட்பாட்டை தங்களின் மார்க்கத்தை பரப்பும் ஆவலுடன் கைக்கொண்டு உள்ளனர். அதன் விளைவாக அவர்களது போதனைகள் மிக விரைவாக பரவுகின்றது.

இந்நாட்களில் கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கத்தை பரப்புவதற்கு காட்டுகின்ற உற்சாகத்தையும் உத்வேகத்தை -யும் அவர்களது கடினமான முயற்சிகளையும் பாருங்கள். தங்களின் புதிய இலக்கிய படைப்புகளை வெளியிடுவதற்கு தேவையான பல இலட்சம் ரூபாய் அவர்களுக்கு கிடைக்கின்றது. ஓரளவு வசதி உள்ள ஐரோப்பியரோ அமெரிக்காரோ சுவிசேஷங்களை பரப்புவதற்கு அளிக்கும் அளவானது ஒட்டுமொத்த இஸ்லாமிய சமுதாய செல்வந்தர்களின் பங்களிப்பை விட அதிகமாக இருக்கின்றது.

இந்தியாவில் மிகப் பெரிய முஸ்லிம் சமுதாயம் இருக்கின்றது. மேலும் அவர்களில் சிலர் செல்வந்தர்களாகவும் நல்ல நிலையிலும் இருக்கின்றனர். ஆயினும் ஒரு நல்ல பணிக்கு செலவு செய்ய வேண்டும் என்ற தேவை வரும் பொழுது அவர்களுள் பலர், ஒரு சில தலைவர்கள், மந்திரிகள் மற்றும் அதிகாரிகளைத் தவிர, கண்டு கொள்வதுமில்லை அக்கறை கொள்வதுமில்லை, மேலும் கஞ்சத்தனமாகவே இருக்கின்றனர். அவர்கள் தங்களது சொந்த அபிலாசை -களிலும் விருப்பங்களிலுமே திளைத்துள்ளனர். அவற்றையே செயல்படுத்தவும் முற்படுகின்றனர். அவர்களது

எண்ணங்களில், அக்கறை இன்மையாலும் மற்றும் பொறுப்பற்ற தன்மையினாலும் துர்நாற்றம் வீசுகின்றது. இஸ்லாம் மற்றும் அதன் தேவைகளை பொருத்தமட்டில் இவர்கள் அலட்சியமாகவே இருக்கின்றனர். ஆனால் இவர்களது சொந்த கௌரவம் அல்லது அந்தஸ்து கேள்விக்குள்ளாகும்போது தங்களது முழு ஆசியும் செலவு செய்தாவது அதை காப்பாற்ற விளைகின்றனர்.

மார்க்கத்தின் நிமித்தம் தைரியமும் உறுதியும் கொண்டவர்கள், மாண்புமிகு ஹஸ்ரத் கலீஃபா சையது முகம்மது ஹசன் கான் பகதூர் பிரதம அமைச்சர் பாட்டியாலா அவர்களைப் போல, ஒரு சிலரே உள்ளனர். அவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் மிகவும் சொற்பமானவர்களே. நிச்சயமாக, சிலர் மார்க்கத்திற்காக செலவு செய்யினும், அவர்கள் அதனை ஒரு சடங்கைப் போலவே அன்றி ஒரு உண்மையான தேவையை பூர்த்தி செய்யும் படியான ஓர் உண்மையான விருப்பத்தினால் செய்வதில்லை. உதாரணத்திற்கு ஒருவர் ஒரு பள்ளிவாசலைக் கட்டினால் வேறொருவர் போட்டிக்காக மற்றொரு பள்ளிவாசலை கட்டுகிறார். ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒரு கணம் அந்தப் பணமானது ஏதேனும் உண்மையான தேவைக்கு பயன்பட்டுள்ளதா என்ற யோசனையின்றி செலவழிக்-கின்றனர்.

இக்காலத்தின் அதிஅவசியமானதும் அவசரத் தேவையானதும், மக்களிடம் இஸ்லாமிய போதனைகளை பரவச் செய்வதே என்பதையும் மக்கள் விசுவாசத்தை இழக்கும் போது இப்பள்ளிவாசல்களுக்கு வருவதற்கு ஒருவர் கூட இருக்க மாட்டார் என்பதையும் இவர்கள் உணரவில்லை. اَصْلُهَا ثَابِتٌ وَّفَرْعُهَا فِي السَّمَآءِ தனது வேர் ஆழமாக உறுதியாக நிலைபெறப்பட்ட, தனது கிளைகள் வானத்தை எட்டியுள்ள ஒரு தூய்மையான மரத்தைப் போல உள்ள இஸ்லாத்தின் ஆன்மீக பலம், கம்பீரம், மற்றும் அழகு ஆகியவற்றை குறித்து மிகக் குறைவாகவே கவனம் செலுத்தும் இவர்கள், பிரம்மாண்டமான உயரமான மினாராக்களை கட்டுவதாலேயே அவைகளை அழகான சலவை கற்களினால் ஜொலிக்க வைப்பதாலேயே மார்க்க நம்பிக்கையை உறுதிப்படுத்த முடியும் என்று கனவு காண்கின்றனர்.

யூதர்களைப் போன்று வடிவத்திற்கும் சடங்குகளுக்கும் அடிமைகளாகிப்போய், உலகத்தை, இஸ்லாம் எனும் ஆசிர்வாதமான மரத்தின் நிழலில் பக்கம் இளைப்பாறும்படி, அழைப்பதில் இவர்களுக்கு ஆர்வம் இல்லை. தேவை ஏற்படும் பொழுது தங்களது மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து, என்றும் விலகிக் கொள்கின்றனர். உண்மையில் மார்க்கக் கடமைகளை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று அவர்களுக்கு தெரிவதுமில்லை அதன்பால் கற்றுக் கொள்ள அவர்கள் அக்கறை எடுத்துக் கொள்வதும் இல்லை. நன்மை மற்றும் தர்மம் எனும் பெயரில் ஒவ்வொரு வருடமும் நமது மக்களால் ஒரு பெரும் தொகை செலவு செய்யப்படுவது உண்மைதான் ஆயினும் வருத்தத்துக்குரிய விஷயம் யாதெனில் சொற்பமானவர்கள் மட்டுமே தர்மம் என்றால் என்ன என்று உணர்ந்துள்ளனர். சூழ்நிலையினை கருத்தில் கொண்டு, அது குறித்து அக்கறைப்படுவதின்றி, கண்மூடித்தனமாக செலவு செய்கின்றனர். இவ்விதம் தங்களது பணத்தையும் தங்கள் உணர்வுகளையும் விரயம் செய்து விட்டு, ஒரு உண்மையான தேவை எழும்போது, ஒன்றும் செய்ய இயலாத நிலையில், ஏற்கனவே விரயம் செய்த வகையில், நியாயப்படுத்தியவாறு, கஞ்சத்தன-மாகவும் அவர்களது கடமைகளை அலட்சியம் செய்தவாறும் இருக்கின்றனர். தற்பெருமையினாலேயே அன்றி, உபகாரத் தன்மையும் கொடைத்தன்மையும் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து தோன்றப் பெற்றவர்களாக அவர்கள் இல்லை.



உதாரணத்திற்காக, சிலர் மறுமையில் தங்களுக்காக தயாராகக் கூடிய மாளிகையை நோக்கமாகக் கொண்டோ அல்லது மறுமையில் நன்மைகளை பெற்று விடலாம் என்று எண்ணியோ வயது முதிர்ந்த நிலையில் பள்ளிவாசலை கட்டுகின்றனர். இவர்கள் இதை ஒரு எளிதான வழியாக கருதுகின்றனர். ஆயினும் உண்மையான இறையச்சம் எனும் போது, மார்க்கம் எனும் கப்பல் அவர்களது கண்களுக்கு எதிரிலேயே மூழ்கினாலும் கூட அல்லது இஸ்லாம் உடனடியாக அழிந்து விடும் எனும் போது கூட இவர்கள் சிறிதும் அசைவதில்லை. இவர்கள் காட்டும் அக்கறை மார்க்கத்தை அழிவிற்கு அழைத்துச் செல்லும். அவர்களது உழைப்பு, கவலை, பக்தி மற்றும் அவர்களது அன்றாட செயல்பாடுகள் அனைத்தும் இப்பவுதீக வாழ்வைப் பற்றியது. இதிலும் கூட இவர்களால் பிற தேசங்கள் வளர்ந்த அளவிற்கு முன்னேற முடியவில்லை.

இஸ்லாமிய சமுதாயத்தில் மார்க்க ரீதியிலான சீர்திருத்தங்களை ஏற்படுத்த உண்மையாக முயற்சிப்பவர் அனைவரும் இவர்களது அலட்சிய போக்கினை குறித்து புலம்ப வேண்டியது உள்ளது. மக்களுக்கு ஐயோ எனும் குரல் சுற்றிலும் கேட்கின்றது. மற்றவர்களுக்காக நான் பேச இயலாது. எனவே நான் எனது சொந்த வேதனையான அனுபவத்தையே பகிர்கின்றேன். பரவலாக இக்காலத்தில் காணப்படும் சீர்கேடுகளையும் ஒழுங்கின்மையையும் கருத்தில் கொண்டே பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலை எழுதியுள்ளேன். இந்நூலில், இஸ்லாத்தின் உண்மைகளை, சூரியனின் பிரகாசத்தை விட தெளிவாகத் தெரியும் வண்ணம், 300 மறுக்க முடியாத பகுத்தறிவின் அடிப்படையிலான வாதங்களின் உதவியோடு தெளிவுபடுத்தியுள்ளேன்.

இஸ்லாத்தின் எதிரிகளின் மீது ஒரு தெளிவான வெற்றியை பெறும் வகையில் இந்நூல் இருப்பதாலும் அதன் விளைவாக முஸ்லிம்களின் உள்ளத்தின் ஆவலை இந்நூல் பூர்த்தி செய்யும் என்பதாலும், வசதி படைத்த முஸ்லிம்கள் மத்தியில் ஒரு வரவேற்பு இருக்கும் என்றும் இந்நூலின் சிறப்பை பாராட்டுவார்கள் என்றும் அதன் நிமித்தம் இந்நூலின் வெளியீடு சம்பந்தமான கஷ்டங்களை மேற்கொள்ள அவர்கள் கரம் கொடுப்பார்கள் என்றும் இயற்கையாகவே நான் நினைத்திருந்தேன். இருந்த போதும் எனது ஏமாற்றத்தை விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. அல்லாஹ் மட்டுமே உதவிக்காக நாம் சார்ந்து இருக்க தகுதியானவன். மேலும் அல்லாஹ்வே மிகச் சிறந்த மிக உயர்ந்த அடைக்கலம் ஆனவன்.

(தொடரும்...)



# நிம்மதியான குடும்ப வாழ்க்கை என்பது குழந்தைகளின் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த உத்தரவாதமாகும்

*ராஷிதா ரஹ்மான் சாஹிபா (சத்ர் லஜ்னா, தில்லி)*

✧ ✧ ✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧ ✧ ✧

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّ اجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும், எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக. மேலும் எங்களை இறையச்சம் கொண்டவர்களுக்கு இமாமாக ஆக்குவாயாக என்று வேண்டுகிறார்கள். (திருக்குர்ஆன் 25:75)

وَمِنْ اٰيٰتِهٖٓ اَنْ خَلَقَ لَكُمْ مِّنْ اَنْفُسِكُمْ اَزْوَاجًا لِّتَسْكُنُوْٓا اِلَيْهَا وَجَعَلَ بَيْنَكُمْ
مَّوَدَّةً وَّرَحْمَةً ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ

பொருள்: மேலும் அவன், உங்களிலிருந்தே உங்களுக்-காக மனைவியர்களை நீங்கள் அவர்களிடம் மன அமைதி பெறுவதற்காகப் படைத்தான் என்பதும், அவன் உங்களுக்-கிடையில் அன்பு மற்றும் கருணையின் உறவை ஏற்படுத்தி இருக்கிறான் என்பதும் அவனது அடையாளங்களில் ஒன்று ஆகும். சிந்திக்கும் சமுதாயத்திற்கு நிச்சயமாக இதில் பல அடையாளங்கள் இருக்கின்றன. (திருக்குர்ஆன் 30:22)

உருது கவிதையின் பொருள்:

**"உங்கள் காலை, விடியற்காலைப் போன்று அழகாக இருக்கட்டும். உங்கள் இரவு நிலவின் இரவைப் போன்று ஒளிமயமாக இருக்கட்டும். எவராவது சுவர்க்கம் பற்றிக் கேட்டால், அது எமது வீடு என்று புன்னகைத்தவாறு கூறுவேன்."**

சூரா ஃபுர்கானின் இந்த வசனத்தில், இஸ்லாத்தின் குடும்ப வாழ்க்கையைப் பற்றிப் படம் பிடித்துக் காட்டியவாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்னவென்றால், எங்கள் மனைவியர்-களிலிருந்தும், குழந்தைகளிலிருந்தும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்குவாயாக. எங்களை இறையச்சம் கொண்டவர்களுக்கு இமாமாக ஆக்குவாயாக என்று ஒவ்வோர் ஆணும், பெண்ணும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். மேலும் وَّ اجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا (வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா) எங்களை இறையச்சம் கொண்டவர்களுக்கு இமாமாக ஆக்குவாயாக என்று கூறியிருப்பதில், எங்கள் குழந்தைகள் மிக உயரிய இறையச்சம் கொண்டவர்களாக இருப்பது மட்டுமின்றி, உண்மையிலேயே நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு இமாமாக ஆகி விடும் வகையில் எங்களின் செயல் அளவிலான முன்மாதிரியும் இருக்க வேண்டும் என்ற இரகசியம் கூறப்பட்டிருக்கிறது.

இல்லற வாழ்க்கையில் கணவன், மனைவியின் உரிமைகளைக் கவனத்தில் கொள்வதாக இஸ்லாம் வாதிடக் கூடியதாக இருக்கிறது. இருவரின் உரிமைகளை வரையறுத்திருக்கிறது. மேலும் இருவருக்கும் ஒரு செயல்முறையை எடுத்து வைக்கிறது. இந்த உறவு திருமணத்திலிருந்து வாள்நாள் முழுவதும் பரவிக் கிடக்கிறது.

இல்லற வாழ்க்கையை மகிழ்ச்சியை உருவாக்கக் கூடியதாகவும், சுவர்க்கத்தைப் போன்றதாகவும் ஆக்குவதற்கும், மகிழ்ச்சியின் இன்பத்தை உணர்வதற்கும், அதை கண்ணியமிக்கதாக ஆக்குவதற்கும், அதில் இறைநெருக்கத்தைப் பெறுவதற்கும் இஸ்லாமிய போதனையில் எல்லா வழிகாட்டல்களும் இருக்கின்றன. திருக்குர்ஆன், عَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ (ஆஷிரூஹுன்ன பில் மஃரூஃப்) என்ற ஒரு பொன்னான அடிப்படைக் கொள்கையைக் குறிப்பிட்டிருக்கிறது. (திருக்குர்ஆன் 4:20). அதாவது நம்பிக்கை கொண்ட ஆண்களே! நீங்கள் உங்கள் வீடுகளை சுவர்க்கத்தின் உறைவிடமாக ஆக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால், எப்போதும் உங்கள் மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொண்டவாறு வாழ்க்கை நடந்து கொள்ளும் இந்தக் கொள்கையின்படி உறுதியுடன் செயல்படுங்கள்.

இந்த வசனத்திலுள்ள பொன்னான போதனை குடும்ப வாழ்க்கையை அழகானதாக ஆக்குவதற்கு உறுதியான உத்தரவாதமாக இருக்கிறது. இந்த பொன்னான போதனையின் விளக்கம், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கீழ்வரும் ஹதீஸிலிருந்து நமக்குக் கிடைக்கிறது:

خَيْرُكُمْ خَيْرُكُمْ لِاَهْلِهٖ وَاَنَا خَيْرُكُمْ لِاَهْلِيْ. (مِشْكٰوةُ - بَابُ عِشْرَةُ النِّسَاءِ)

பொருள்: முஸ்லிம்களே! தன் மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றவரே இறைவனின் பார்வையில் உங்களில் மிகச் சிறந்தவர் ஆவார். மேலும் குடும்பத்தாருடன் நடந்து கொள்வதில் உங்களில் நான் மிகச் சிறந்தவன் ஆவேன் என்று நான் வாதிட்டுக் கூறுகிறேன். எனவே எனது நடைமுறையை முன்னிறுத்துங்கள்; அதைப் பின்பற்றுங்கள். நீங்களும் இறைவன் பார்வையில் அவனுடைய அன்பிற்குரியவர் ஆகலாம். சமூகத்துடன் அழகிய முறையில் நடந்து கொள்வது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் வலியுறுத்தி அறிவுரை கூறியிருக்கிறார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: “இரண்டு நண்பர்களுடன் இருப்பது போன்ற தொடர்பு கணவருக்கு மனைவியர்களுடன் இருக்க வேண்டும். மனிதனின் நல்லொழுக்கம் மற்றும் இறைவனுடன் அவருக்கு இருக்கும் தொடர்புக்கு முதல் சாட்சியாக இந்த மனைவியர்தான் இருக்கின்றனர். இவர்களுடனேயே அவருடைய நல்ல தொடர்புகள் இல்லை என்றால், பிறகு இறைவனுடன் சமாதானம் ஏற்படுவது எவ்வாறு சாத்தியமாகும்?” (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 418)

குடும்ப வாழ்க்கையின் வெற்றிக்கான திறவுகோல் துஆ ஆகும். துஆ என்பது என்ன? தன்னைத்தானே ஒன்றுமற்றவன் என்று உறுதி கொண்டவாறு, ‘துஆ செய்யாமல் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. துஆவினால் எல்லாம் சாத்தியமாகும்’



என்ற முழுமையான உறுதிப்பாட்டுடன் ஆற்றல் மிக்கவனும், வல்லமை மிக்கவனும் ஆகிய இறைவனுக்கு முன்னால் தன்னை அர்ப்பணிப்பது ஆகும். சுருக்கமாக, வாழ்க்கையை மகிழ்ச்சியுடையதாகவும், வெற்றிக்குரியதாக -வும் இருக்கும் மருந்து துஆதான். இதன் காரணமாகத்தான், நமது அன்பிற்குரிய ரஸூலுல்லாஹ் (ஸல்) இல்லற வாழ்க்கையின் ஒவ்வோர் அடியிலும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு துஆக்களைக் கற்றுக் கொடுத்தார்கள். துஆ என்பது எந்த படிநிலையில் இருக்க வேண்டும் என்பதை கொஞ்சம் கேளுங்கள்.

“ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்களிடம் ஒருவர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உங்களின் மருமகனாக ஆகும் அளவிலான இந்த அந்தஸ்து உங்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்கள், என் இந்த மகள் பிறந்தபோது, அறுத்துப் பலியிடப்பட்ட கால்நடை துடிப்பது போன்ற துடிப்புடன் நான் அல்லாஹ்விடம், இவளை நீயே காப்பாற்றுவாயாக. உலகில் வேறு யாருக்கும் கிடைக்காத அத்தகு அந்தஸ்தை வழங்குவாயாக என்று துஆ செய்தேன். ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்கள் இதைக் கூறிக் கொண்டிருந்தபோது அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.” (1.04.2011 அன்று ஹுஸூர் அவர்கள் எழுதிய கடிதம்).

மூன்று துஆக்கள் இறைவனிடம் கண்டிப்பாக ஒப்புக் கொள்ளப்படுகின்றன என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான பரிவுடன் தனது உம்மத்திற்கு கவனமூட்டினார்கள். ஒன்று, அநீதிக்கு உட்படுத்தப்பட்ட நபர். அநீதியிழைப்பவரால் துன்பத்திற்குள்ளாகி இறைவனை அழைப்பவர். இரண்டாவது, பயணியின் துஆ. அவர் பயணத்தின் துன்பங்களால் சூழப்பட்டு இறைவனிடம் துஆ செய்கின்றார். மூன்றாவது, தன் பிள்ளைகளுக்காக துடிதுடித்தவாறு குழந்தைகளின் நன்மைக்காக செய்யும் துஆ. (திர்மதி கிதாபுத் தஃவாத்)

எனவே பிள்ளைகளுக்காக பெற்றோரின் துஆ அமுதமாக இருக்கிறது. ஏனெனில் துஆ அங்கீகாரம் பெறுவதற்கு எத்தகைய மன உணர்வுகள் தேவைப்படு -கின்றனவோ அவை பெற்றோரின் துஆக்களில் நிறைவான முறையில் காணப்படுகின்றன. வெளிப்படையான காரணிகளை மேற்கொள்வதுடன் பெற்றோர் தம் குழந்தைகளுக்காக இறைவன் முன்னிலையில் வீழ்ந்தவாறு மார்க்க, உலக வெற்றிகளை வேண்ட வேண்டும் என்ற பொன்னான வழிகாட்டலை இஸ்லாம் மட்டும்தான் வழங்குகிறது. நாம் துஆவின் ஆற்றலை அடையாளம் கண்டு கொள்ளவும், இந்த ஆன்மிக மருந்தின் மூலமாக நம் தலைமுறைகளின் மார்க்கத்தையும், உலகத்தையும் சிறந்ததாக்குவதற்காக முயற்சி செய்யவும் வேண்டிய தேவை அஹ்மதி தாய்மார்களாகிய நமக்கு இருக்கிறது. இந்த மருந்து மிகவும் அனுபவம் வாய்ந்ததாகவும், மிகவும் தொன்மையானதாகவும் இருக்கிறது. மேலும் எல்லா நபிமார்களாலும் சோதிக்கப்பட்டதாக இருக்கிறது. “சோதித்துப் பார்ப்பவர்களே! இந்த மருந்தையும் சோதித்துப் பாருங்கள்.”

அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனில் எத்தகைய முழுமையான வாழ்வின் வழிமுறையை வழங்கி இருக்கிறான் என்றால், அவற்றின்படி செயல்பட்டு மனிதன் குடும்ப வாழ்க்கையையும், சமூக வாழ்க்கையையும் வெற்றி பெறச் செய்யலாம். அதன் செயல் வடிவிலான முன்மாதிரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மையான, பரிசுத்தமான வாழ்க்கையில் நமக்கு முன்னால் இருக்கிறது. அதன் முன்மாதிரிகள் சஹாபாக்கள் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) மற்றும் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின், அவர் -களுடைய கலீஃபாக்களின் வாழ்க்கையில் தென்படுகின்றன. மேலும் அவை நம்மை சுவர்க்கத்திற்கு நிகரான சமூகத்தை நிலைநாட்டுவதற்கு அழைப்பு விடுக்கின்றன.

ஹஸ்ரத் கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடன் ஏறக்குறைய 15 ஆண்டுகள் நீண்ட காலத்திற்குப் பிறகு முதல் வஹி இறங்கிய நிகழ்வின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முறையில் நடந்து கொண்ட விதத்தைப் பற்றிக் கூறிய சாட்சி இவ்வாறு இருந்தது:

“இறைவன் உங்களை ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில் நீங்கள் உறவுகளைப் பேணுகிறீர்கள். உறவினர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்கிறீர்கள். சுமைகளைத் தாங்கிக் கொள்கிறீர்கள். மேலும் இல்லாமல் போய்விட்ட நன்மைகளை உயிரூட்டுகிறீர்கள். விருந்தோம்பல் செய்கின்றீர்கள். மேலும் அவசியமானவர்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களுக்கு உதவி செய்கின்றீர்கள்.” (புகாரி. கிதாபுல் வஹி).

இல்வாழ்க்கை தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் சாட்சி இவ்வாறு இருந்தது:

“நபி கரீம் (ஸல்) அவர்கள் அனைவரையும் விட மென்மையான பண்பு கொண்டவர்களாக இருந்தார்கள். அனைவரையும் விட கருணை காட்டுபவர்களாக இருந்தார்கள். பொதுவான மனிதரைப் போன்று எவ்வித பகட்டும் இன்றி, வீட்டில் இருப்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் முகம் சுளித்ததில்லை. எப்போதும் புன் சிரிப்புடன் இருந்தார்கள். மேலும் அவர்கள் தமது முழு வாழ்நாளிலும் ஒருபோதும் எந்த மனைவியின் மீதும், எந்த வேலைக்காரரின் மீதும் கை ஓங்கியதில்லை. (ஷமாயிலுத் திர்மிதி பாபு மாஜாஅ ∴பீ கல்கி ரஸுூலில்லாஹி).

ரஸுூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டில் இறைவணக்கத்தை நிலைநாட்டுவதன் பக்கம் அதிக கவனம் இருந்தது. கிதாப் இப்னி மாஜா இகாமதுஸ் ஸலாத் என்பதில் கீழ்வரும் ஹதீஸ் இடம் பெற்றிருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“ஒருவர் மற்றவரை தொழுகைக்காகவும் இறைவணக்கத்திற்காகவும் விழிப்பூட்டுகின்ற, கண் விழிக்காதபோது ஒருவர் மற்றவரை தண்ணீர் தெளித்து எழச் செய்கின்ற கணவன் மனைவி மிகவும் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்.” (ஹமாரா கர் ஹமாரீ ஜன்னத் நூல் பக்கம் 12-ல் குறிப்பிடப்பட்டுள்ள சான்றின்படி).

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை அல்லாஹ் திருக்குர்ஆனில் அழகிய முன்மாதிரி என்று குறிப்பிட்டிருக்கிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அன்பு கொண்டவராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையின், தூய வாழ்வின் கண்ணாடியாகவும், பிம்பமாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தம்மை அந்த நபி (ஸல்) அவர்களின் அன்பில் மாய்த்துக் கொண்டவாறு எந்த அளவுக்கு பின்பற்றினார்கள் என்றால், அதற்கான முன்மாதிரியை உலகம் இருக்கும் வரை எடுத்து வைக்க முடியாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரையறைக்குள் தம்மை வரையறுத்துக் கொண்டார்கள். இன்னும் கூறுவதென்றால், வீடுகளை சுவர்க்கத்தைப் போன்றதாக ஆக்குவதற்காக அந்தத் தூய நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியை நிலைநாட்டுங்கள் என்று தனது ஜமாஅத்துக்கு வலியுறுத்திக் கூறினார்கள்.

மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதீ அமத்துஷ் ஷுகூர் சாஹிபா அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

“ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களையும் எத்தனை மக்கள் நெருக்கமாகப் பார்த்தார்களோ எடுத்துக்காட்டாக, அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் இரண்டு சகோதரர்கள், அவர்களின் சந்ததிகள், மருமகள்கள், தொண்டு செய்யும் பெண்கள் ஆகிய அனைவரும் கூறுவது என்னவெனில், இரண்டு பேரும் பொதுவான கணவர், மனைவி போன்று இருக்கவில்லை. அவர்கள் இருவருக்கிடையில் ஒருபோதும் சண்டை நடந்ததில்லை. எந்த விஷயத்திலும் சர்ச்சை ஏற்பட்டதில்லை. ஹுஸுூர் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் எல்லா விஷயத்தையும் ஏற்றுக் கொண்டார்கள் அன்புடனும் பேருதவியுடனும் நடந்து கொண்டார்கள் என்றால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களும் ஹுஸுூர் (அலை) அவர்களின் சின்னச் சின்ன விருப்பமான, விருப்பமில்லாத விஷயங்களை கவனத்தில் கொண்டார்கள். உணவும் பெரும்பாலும் தானே சமைத்து வந்தார்கள். அல்லது முன்னால் அமர்ந்து தனது கண்காணிப்பில் உணவை சமைக்க வைத்தார்கள். ஒரு நண்பர் இன்னொரு நண்பருக்கு உதவி செய்வது போன்று ஹுஸுூர் (அலை) அவர்களின் வேலைகளில் உதவி செய்து வந்தார்கள். சுருக்கமாக, இந்த கணவன், மனைவி நிகரற்றவர்களாக இருந்தனர். மேலும் பொதுவாக பார்க்க முடியாதது போன்று, பரஸ்பர அன்பு இருந்தது.

ஒருமுறை ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) தொழத் தொடங்கினார்கள். நிய்யத் கூறுவதற்கு முன் தன் எஜமானருக்கு ‘அஸ்ஸலாமு அலைக்கும்’ என்று கூறினார்கள். மேலும் ‘அல்லாஹ் உங்களின் (மரணம் பற்றிய) துயரத்தைக் காட்டாதிருப்பானாக என்றும், உங்களுக்கு முன்பு என்னை தன்னிடம் எடுத்துக் கொள்ளட்டுமாக’ என்றும் எப்போதும் நான் துஆ செய்கிறேன் என்று கூறினார்கள். இதைக் கேட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ‘நீ எனக்குப் பிறகு உயிருடன் இருப்பாயாக நான் உன்னை சாந்தியுடன் விட்டுச் செல்ல வேண்டும்’ என்று நான் எப்போதும் துஆ செய்கிறேன் என்று கூறினார்கள். மேலும்

> பிள்ளைகளுக்காக பெற்றோரின் துஆ அமுதமாக இருக்கிறது. ஏனெனில் துஆ அங்கீகாரம் பெறுவதற்கு எத்தகைய மன உணர்வுகள் தேவைப்படுகின்றனவோ அவை பெற்றோரின் துஆக்களில் நிறைவான முறையில் காணப்படுகிறது. வெளிப்படையான காரணிகளை மேற்கொள்வதுடன் பெற்றோர் தம் குழந்தைகளுக்காக இறைவன் முன்னிலையில் வீழ்ந்தவாறு மார்க்க, உலக வெற்றிகளை வேண்ட வேண்டும் என்ற பொன்னான வழிகாட்டலை இஸ்லாம் மட்டும்தான் வழங்குகிறது. நாம் துஆவின் ஆற்றலை அடையாளம் கண்டு கொள்ளவும், இந்த ஆன்மிக மருந்தின் மூலமாக நம் தலைமுறைகளின் மார்க்கத்தையும், உலகத்தையும் சிறந்ததாக்குவதற்காக முயற்சி செய்யவும் வேண்டிய தேவை அஹ்மதி தாய்மார்களாகிய நமக்கு இருக்கிறது.

அவ்வாறே நடந்தது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை விட 40 ஆண்டுகளுக்குப் முன்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்தார்கள். (சீரத் அம்மா ஜான் பக்கம் 8,9)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் பரிசுத்தமான உடலுக்கு அருகில் வந்து, 'நீங்கள் நபிமார்களின் சந்திரனாக இருந்தீர்கள். உங்கள் மூலமாக எனது வீட்டில் மலக்குகள் இறங்கிக் கொண்டிருந்தனர். இறைவன் உரையாடிக் கொண்டிருந்தான்' என்று கூறினார்கள். (சீரத் அம்மா ஜான் பக்கம் 406).

ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் இந்தக் கூற்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது குடும்பத்தாரிடம் நடந்து கொண்ட அழகிய முறையை பிரதிபலிக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

"கணவர் என்பவர் மனைவிக்கு அல்லாஹ்வின் தோற்றமாக இருக்கிறார். அல்லாஹ் தன்னைத் தவிர வேறு எவருக்காவது சஜ்தா செய்யுமாறு கட்டளையிட்டிருப்பான் என்றால், மனைவிக்கு தன் கணவருக்கு சஜ்தா செய்யுமாறு கட்டளையிட்டிருப்பான் என்று ஹதீஸில் வந்துள்ளது." (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 404)

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

"தங்களின் மீது ஏதாவதொரு வகையான அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக பெண்கள் புரிந்து கொள்ள வேண்டாம். ஏனெனில் அவளுடைய பல உரிமைகள் ஆண் மீதும் வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கூறுவதென்றால், பெண்களை முற்றிலும் நாற்காலியின் மீது அமர வைத்து ஆணிடம், (பெண்களாகிய) அவர்களை பராமரியுங்கள் என்று கூறியிருக்கிறான்." (மல்பூஸாத் தொகுதி 5 பக்கம் 30).

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பெண்களுக்கு அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

"பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று நான் ஆண்களுக்கு அறிவுரை கூறுவதைப் போன்றே, கணவரின் உரிமைகளைக் குறித்து பெண்களுக்கும் அறிவுரை கூறுகிறேன். கணவன், மனைவிக்கு இடையில் மிகவும் அதிகமான அன்பு இருக்க வேண்டும். அவற்றால் நம்பிக்கை கொண்டவர்களின் வீடு சுவர்க்கத்தின் முன்மாதிரியாக ஆகி விட வேண்டும்." (நிகாஹ் பேருரை 5.2.1910).

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சூரா பகரா வசனம் 224-க்கு விளக்கவுரை அளித்தவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்:

"மனைவிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்வீர்கள் என்றால், குழந்தைகளின் மீது நல்ல தாக்கம் ஏற்படும். அநீதியாக நடந்து கொள்வீர்கள் என்றால், குழந்தைகளும் உங்களுடன் நன்றி கெட்டவர்களாக நடந்து கொள்வார்கள். எனவே குழந்தைகள் நல்லவர்களாக இருப்பதற்காக மனைவிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது அவசியமாகும். தீயதாக நடந்து கொண்டதால் உங்கள் விளை நிலம் மோசமாகி விட்டால், பிறகு தானியமும் மோசமாகி விடும். மனைவி ஆகிய விளை நிலத்துடன் அதாவது மனைவியுடன் தீய முறையில் நடந்து கொள்வது குழந்தைகளை தீய ஒழுக்கமுடையவர்களாக ஆக்கி விடும். ஏனெனில் குழந்தை தாயிடமிருந்து ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்கிறது. ஆனால் உங்களுக்காக நன்மைக்கான வழிவகையையே உருவாக்க வேண்டும் இல்லையென்றால், தீய விளைவை அனுபவிப்பீர்கள்."

தொடர்ந்து ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

"மக்கள் பெண்ணை திருமணம் செய்து கொடுக்கும் போது இப்போது நாங்கள் உங்கள் கையில் கொடுத்து விட்டோம் உங்கள் விருப்பப்படி இவளுடன் நடந்து கொள்ளுங்கள் என்று பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரிடம் கூறுகின்றனர். இதன் பொருள், இவளை செருப்பால் அடியுங்கள் என்பதன்று. மாறாக, அதன் பொருள், இவள் உங்களுடைவள். இவளை பாதுகாத்து வையுங்கள் இவளிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்பதாகும். எனவே أَنَّىٰ شِئْتُمْ (அன்னா ஷிஃதும் - நீங்கள் விரும்பியபடி நடந்து கொள்ளுங்கள்) என்பதன் பொருள், மனைவி உங்களுக் -குரியவர். அவருடன் மோசமாக நடந்து கொள்வீர்கள் என்றால், அதன் விளைவு உங்களுக்கு தீயதாக இருக்கும். நல்ல முறையில் நடந்து கொண்டால், நல்லதாக இருக்கும் என்பதாகும். (ஃபஸாயிலுல் குர்ஆன் பக்கம் 186 முதல் 187 வரை)



நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அல்லாஹ் நமக்கு கிலாஃபத்தை வழங்கி இருக்கிறான். முதல் நாளிலிருந்தே அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்கள் உலக அளவிலான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் உலக, மார்க்க கல்வியையும், தர்பிய்யத்திற்காக நேரத்தையும் கொடுத்திருக்கின்றனர். மேலும் அவர்கள் எதிர்கொள்ளும் எல்லாவிதமான பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்காக மதிக்கத்தக்க வழிகாட்டலை வழங்கி இருக்கின்றனர். தர்பிய்யத்தின் எல்லா அம்சங்களையும் பற்றி தெளிவு படுத்தி நமது சீர்திருத்தத்திற்கான முயற்சியை செய்திருக்கின்றனர்.

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 27.07.1991 நடைபெற்ற பிரித்தானிய ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு உரை நிகழ்த்தும்போது இவ்வாறு கூறினார்கள்:

“எனவே தாயின் காலடியில் சுவர்க்கம் இருக்கிறது என்று கூறப்படும்போது எல்லா தாயின் காலடியிலும் சுவர்க்கம்தான் இருக்கிறது என்பது கருத்தன்று. சுவர்க்கம் கிடைக்க முடியும் என்றால் அடுத்த தலைமுறைகளுக்கு கிடைக்க முடியும். தாமே சுவர்க்கத்துக்கான அடையாளமாக மாறி விட்ட, தம்மிடமே சுவர்க்கத்தின் அடையாளங்கள் வெளிப்பட்டிருக்கின்ற அத்தகைய தாய்மார்களிடமிருந்தே சுவர்க்கம் கிடைக்க முடியும். அத்தகைய தாய்மார்களின் பிள்ளைகள் கண்டிப்பாக சுவர்க்கத்திற்குரியவர்களாக மாறி விடுகின்றனர். எனவே இனி வரும் சமுதாயங்களின் நியதியைத் தீர்மானிப்பது நிச்சயமாக பெண்களின் வேலையாகும் என்ற இந்த இரகசியத்தை நான் திருக்குர்ஆனைப் படித்ததிலிருந்து பெற்றேன். மேலும் இந்தத் தீர்மானத்தை (தாய்மார்களாகிய) அவர்கள் இன்று எடுக்க வேண்டியது வரும் இல்லையென்றால், எதிர்காலம் கண்டிப்பாக இருளில் இருக்கும். இன்று அஹ்மதி பெண்கள் தமது இதயங்களை இறையன்பினால் ஒளிமயமாக்க வேண்டியது வரும். இல்லையென்றால், அவர்களின் இதயங்கள் தாய்ப் பாலுடன் அருந்தச் செய்கின்ற அந்த ஒளியை அவர்களின் குழந்தைகளுக்கு அருந்தச் செய்ய மாட்டார்கள்.”

மேலும் ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 28.07.1990 நடைபெற்ற பிரித்தானிய ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு உரை நிகழ்த்தும்போது இவ்வாறு கூறினார்கள்:

“எனவே நீங்கள் உலகத்திற்கு அமைதியை வழங்க வேண்டும் என்றால்,அஹ்மதி பெண்களின் கடமை, அவர்கள் கிழக்கில் வாழ்பவர்களாக இருந்தாலும் அல்லது மேற்கில் வாழ்பவர்களாக இருந்தாலும் வெளியிருந்து வருபவர்கள் அவர்களைப் பார்க்கும்போது இவர்கள் எதைப் பெற்றிருக்கின்றனர் என்பதை அவர்கள் அறியும் வகையில், தமது வீட்டை உண்மையான முன்மாதிரியாக ஆக்குவது அவர்களின் கடமையாகும். மேலும் உலகம் முழுவதிலும் அத்தகைய முன்மாதிரியை உருவாக்குங்கள். அதன் விளைவாக மனித குலம் தனது வீட்டின் இழந்த சுவர்க்கத்தைப் பெற முடியும் வகையில், அத்தகைய தூய முன்மாதிரியை எடுத்து வையுங்கள். உங்களுக்கு இன்று முக்கியமான தூதுச் செய்தி என்னவென்றால், நீங்கள் உங்கள் வீடுகளை புதிதாகக் கட்டமையுங்கள். உங்கள் வீடுகளை சுவர்க்கத்தின் அடையாளமாக ஆக்குங்கள். உங்கள் தொடர்புகளில் தன்னடக்கத்தையும், அன்பையும் உருவாக்குங்கள். உறவுகள் முறிகின்ற, வெறுப்புகள் உருவாகின்ற எல்லா விஷயங்களிலிருந்தும் விலகி இருங்கள். இன்று உலகத்திற்கு அனைத்தையும் விட அத்தகைய வீட்டிற்கான தேவை இருக்கிறது. மேலும் இத்தகைய வீட்டை அஹ்மதிகள் உலகத்திற்கு வழங்காவிட்டால், உலகத்தின் எந்தவொரு சமூகமும் மனித குலத்திற்கு (நல்ல) வீட்டிற்கான ஏற்பாடு செய்ய முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.” (ஆமீன்).
(ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 28.07.1990-ல் நடைபெற்ற பிரித்தானிய ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய உரை).

முன்னேற்றமடைந்த இறைஜமாஅத்தின் அடிப்படைகளை உறுதியாக்குவதற்காக ஒவ்வொரு தாயும் அவருடைய அந்தஸ்து மற்றும் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியவாறு 27.12.1991 அன்று காதியானில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் பெண்களை விளித்தவாறு, சொற்பொழிவாற்றிய -வாறு ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“சமுதாயத்தின் எதிர்காலத்தை உருவாக்குவது பெண்களின் அதிகாரத்தில் இருக்கிறது. எந்த சுவர்க்கத்தைப் பற்றி இறைவன் கூறியிருக்கிறானோ அது மறுமையின் சுவர்க்கம் மட்டுமே ஆகும். இன்னும் கூறுவதென்றால், இவ்வுலகத்தின் சுவர்க்கமும் இருக்கிறது. எனவே இது தொடர்பாக இந்த ஜமாஅத்தில் பெண்களுக்கு சில பொறுப்புகள் இருக்கின்றன. அவை இவ்வுலகத்துடனும் தொடர்புடையவையாக இருக்கின்றன. வீட்டின் எஜமானராக இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் முதன்முதலில் தனது வீட்டில் சுவர்க்கம் உருவாகி விட்டதா? அல்லது உருவாகவில்லையா என்று பார்க்க வேண்டியது வரும். அவர்களின் குழந்தைகளிடம் சுவர்க்கத்திற்குரியவர்களின் அடையாளங்கள் காணப்படு -கின்றனவா? இல்லையா என்று பார்க்க வேண்டியது வரும். ஒவ்வொரு பெண்ணும், தானே தனது ந∴ப்ஸைப் பற்றி பரிசீலனை செய்ய முடியும்.

ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எடுத்து வைத்த அளவுகோலின்படி, என் அன்பிற்குரிய தலைவரும், எஜமானரும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் என்னை விளித்து இவ்வளவு அன்புடனும், இவ்வளவு பெருமையுடனும், இவ்வளவு நம்பிக்கையுடனும் கூறிய, என்னைப் பற்றிக் குறிப்பிட்டவாறு, எனது குழுவில் இணைந்துள்ள முஸ்லிம் பெண்களே! உங்களின் காலடியின் கீழ் சுவர்க்கம் இருக்கிறது என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று கூறிய அத்தகைய பெண்ணாக நான் இருக்கிறேனா என்பதை ஆய்வு செய்து பார்க்க முடியும். எனவே நீங்கள் உங்களுக்கான சுவர்க்கத்தை உங்கள் தாய்மார்களின் காலடியின் கீழ் தேடுங்கள் என்பது ஆண்களுக்கு மட்டும் உரிய, குழந்தைகளுக்கு மட்டும் உரிய தூது அல்ல........ எனவே சுவர்க்கத்திற்கான நற்செய்தி என்பது கண்டிப்பாக ஒவ்வொரு தாயின் காலடியிலும் சுவர்க்கம் இருக்கிறது என்று பொருள் அல்ல. இதன் கருத்து, முஸ்லிம் பெண்களே! உங்களின் காலடியின் கீழ் சுவர்க்கம் வெளிவர வேண்டும் என்று இறைவன் உங்களிடம் நம்பிக்கை வைக்கிறான். எங்கு உங்களில் காலடி படுமோ அங்கு அருளின் காலடி படட்டும். மேலும் உங்கள் பிள்ளைகள் உங்களிடமிருந்து தர்பிய்யத்தைப் பெறும் சுவர்க்கத்தின் தோற்றத்தைக் கொண்ட சமூகத்தை உருவாக்குங்கள். எனவே இந்தப் பார்வையிலிருந்து அஹ்மதி பெண்களுக்கு மிக அதிகமாக சிந்திக்க வேண்டியது இருக்கிறது. மிகவும் கவலைப்பட வேண்டியது இருக்கிறது.”

(தொடரும்...)







# கிலாஃபத்தின் கீழ் முஸ்லிம்கள் ஒன்றுபட ஓர் அழைப்பு!

(அல்ஹகம் டிசம்பர் 2023)

சமீபத்திய நிகழ்வுகள், குறிப்பாக பாலஸ்தீனில் நடைபெற்று வரும் நெருக்கடியின் பின்னணியில், முஸ்லிம் உலகின் ஒற்றுமையின்மை இதற்கு முன்பை விட அதிகமாக வெளிப்படையாகியுள்ளது. முஸ்லிம் நாடுகளும் அவர்களது தலைவர்களும் ஒன்றுபட்ட கருத்தினை வழங்கத் தவறி இருப்பது, பலரிடையே ஏமாற்றத்தையும் மனவேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம்களைப் பிரித்து நிற்கும் இடைவெளிகளை நீக்குவதற்காக ஒரு ஒருங்கிணைக்கும் சக்தி மிகவும் அவசியமாகியுள்ளது என்பது தெளிவாகிறது. இதற்கான தீர்வாக கிலா∴பத் நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணத்தை அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் ஏற்றுக்கொண்டு வருகின்றனர்.

முஸ்லிம் உலகம் நீண்ட காலமாக பிரிவினை வாதம், மார்க்கப் பிரிவுகள் மற்றும் புவியியல் அரசியல் வேறுபாடுகள் காரணமாக உள்பிளவுகளால் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், உலகளாவிய அளவில் முஸ்லிம்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு ஆன்மிக மறுமலர்ச்சியை அளிக்கக்கூடிய ஒரு தலைவர் ஒரு கலீ∴பா இப்போது மிகவும் அவசியமாகிறார். அத்தகைய தலைவர் உண்மையிலேயே இருக்கிறார். அன்னார் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆவார்கள். அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீ∴பாவாக உள்ளார்கள்.

பல தசாப்தங்களாக அவர்கள் முஸ்லிம்களுக்கு வழங்கி வரும் அறிவுரை என்னவென்றால், முஸ்லிம் உலகம் கருத்து வேறுபாடுகளின் சங்கிலியிலிருந்து விடுபட வேண்டு-மெனில், ஒற்றுமையே ஒரே வழியாகும். உலகம் முழுவதிலும் உள்ள மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் நாடாளுமன்றங்களுக்கு அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். அங்கெல்லாம் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்த செய்தி இதுவாகும்: முஸ்லிம் உலகம் மட்டுமல்ல, உண்மை-யில் முழு உலகமும் ஒன்றிணைய வேண்டும் அப்போதுதான் உலக அமைதி நிலைநிறுத்தப்படும். தனிநாடுகளின் சுயநல விருப்பங்களும் அரசியல் நோக்கங்களும், ஓர் உயர்ந்த இலக்கிற்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

ஆனால், காலத்தின் கலீ∴பாவை வெறுமனே அங்கீகரிப்பது மட்டுமே போதுமானதல்ல. மாறாக, ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் அவருடன் உறுதியான உறவை ஏற்படுத்தி, இந்த அமைப்புடன் வலுவாக இணைந்திருப்பது கடமையாகும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் கிலா∴பத், இந்த காலத்தின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியான ஹஸ்ரத் மிரஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் 1908-ஆம் ஆண்டு மறைந்த பின்னர் ஆரம்பமானது. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (மஸீஹின் கலீ∴பா) ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்கள் ஆவார்கள்.

கிலா∴பத்தின் முக்கியத்துவத்தை விளக்கும்போது, அவர்கள் நம்பிக்கையாளர்களுக்கும் இமாமிற்கும் இடையேயான உறவை அடக்கம் செய்யத் தயார்படுத்து-பவரின் கைகளில் இருக்கும் ஒரு மரணித்த உடலின் நிலையுடன் ஒப்பிட்டார்கள்:

“இமாமின் கைகளில் உங்கள் நிலை, ஒரு கஸ்ஸால் (மரணமடைந்த உடலைக் குளிப்பாட்டுபவர்) கைகளில் இருக்கும் ஓர் உயிரற்ற சடலத்தைப் போன்றதாக இருக்க வேண்டும். உங்கள் நோக்கங்களும் ஆசைகளும் முற்றிலும் அழிந்திருக்க வேண்டும். நீங்கள் ஒரு இயந்திரத்தோடு இணைக்கப்பட்ட வண்டிகளைப் போல இமாமோடு இணைந்திருக்க வேண்டும். பின்னர், நீங்கள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருகிறீர்களா இல்லையா? என்பதை நீங்களே பாருங்கள். ஆகையால், இந்த அருளுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் நன்றியுணர்வு அருட்கொடைகளை அதிகரிக்கிறது.” (குத்பாத்தே நூர், பக்கம் 131)

இரண்டாவது கலீ∴பாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள், கிலா∴பத்தை ஹப்லுல்லாஹ் (அல்லாஹ்வின் கயிறு) என விவரித்தார்கள். இந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றிப்பிடிப்பதே முன்னேற்றம், வளம் மற்றும் கண்ணியத்திற்கான வழி என அவர்கள் எடுத்துரைத்தார்கள்:

“கிலா∴பத் ஹப்லுல்லாஹ் (அல்லாஹ்வின் கயிறு) என்பதை மிகவும் மனதில் கொள்ளுங்கள். அது அல்லாஹ்வின் எத்தகைய கயிறு என்றால் அதனை உறுதியாகப் பற்றிப்பிடிப்பதன் மூலமே நீங்கள் முன்னேற்றம் அடைய முடியும். அதனை விட்டு விடுபவர் அழிவைச் சந்திப்பார்.” (நிஸாமே கிலா∴பத், பக்கம் 77)

இஸ்லாமிய உலகில் அதிகரித்து வரும் மோதல்களும் நெருக்கடிகளும் நிறைந்த இந்த சூழலில், மிகவும் முக்கியமான ஒரு கேள்வி எழுகிறது: முஸ்லிம் உம்மத்தை ஒற்றுமை மற்றும் அமைதியின் பாதையில் வழிநடத்தக்கூடிய தலைவரை அடையாளம் கண்டு நியமிக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

இங்கே மூன்றாவது கலீ∴பாவான ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹ்) அவர்களின் ஆழமான வார்த்தைகள் மிகவும் பொருத்தமாகத் தோன்றுகின்றன:

“எங்கள் நம்பிக்கை என்னவென்றால், கலீ∴பாவை நியமிப்பது அல்லாஹ்வே ஆகும். இந்த முடிவு மக்களிடம் விடப்பட்டால், அவர்கள் தாங்கள் மிகச் சிறந்தவர் என்று கருதுபவரையே கலீ∴பாவாகத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், கலீ∴பாவை அல்லாஹ்வே தேர்ந்தெடுக்கிறான். அவனுடைய தேர்வில் எந்தக் குறையும் இருக்க முடியாது. ............. பின்னர் அல்லாஹ் அவரை உயர்த்தி, தன்னுடைய அரவணைப்பில் இடம் அளிக்கிறான். அவருக்கு எதிராக நிற்பவர்களிடம் அல்லாஹ் கூறுகிறான்: “உங்களுக்கு சக்தி இருந்தால் என்னோடு போராடுங்கள்.” (அல் ∴பஸல், 17 மார்ச் 1967, பக்கம் 3)

எனவே, கலீ∴பாவுடனான நமது உறவு, அல்லாஹ் உடனான நமது உறவின் அடிப்படையில் அமைய வேண்டும். ஒருவர் கிலா∴பத்தோடு நெருக்கமடையும்போது, அல்லாஹ்வின் மீதான அன்பும் மேலும் வலுப்பெற வேண்டும்.

இந்த விஷயத்தை விளக்கும்போது, நான்காவது கலீ∴பாவான ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

“ஒவ்வோர் அஹ்மதிக்கும், ஹஸ்ரத் நபி முஹம்மது (ஸல்) அவர்களுடனும் அன்னாரது கலீ∴பாக்களுடனும், அல்லது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் அன்னாரது கலீ∴பாக்களுடனும் இருக்கும் உறவு, அல்லாஹ்வுடனான உறவின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். அந்த உறவின் அடித்தளம் அல்லாஹ்வுடனான உறவாக இல்லாவிட்டால், அந்த உறவு செயற்கையானது, போலியானது, அர்த்தமற்றது. அல்லாஹ்வின் அன்பே அந்த உறவை உருவாக்க வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் அன்பில் வளரும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் பிறர் மீதான உறவும் வளர வேண்டும். அப்படிப்பட்டவர்கள் எந்தவித ஆபத்திலும் இல்லை என்று உறுதியாக நம்புங்கள் இவ்வுலகிலும் மறுமையிலும். நான் விளக்கிய இந்த வகையான உறவை உடையவர்கள், எல்லா குழப்பங்களில் இருந்தும் பாதுகாப்பாக இருப்பார்கள்.” (ஜுமுஆ உரை, 23 நவம்பர் 1990)

எனவே, 2008-ஆம் ஆண்டு கிலா∴பத் ஜுபிலி நிகழ்வின் போது, ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன், கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முன்னிலையில் நாம் எடுத்த உறுதிமொழியின் பின்வரும் வார்த்தைகளை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். மேலும், கிலா∴பத்துடன் வலுவான பிணைப்பை உருவாக்குவதற்கான நமது பொறுப்பை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது:

“கிலா∴பத் அமைப்பின் பாதுகாப்பிற்கும் நிலைத்-தன்மைக்கும் நாங்கள் எங்களது இறுதி மூச்சு வரை பாடுபடுவோம் என்றும், எங்களது சந்ததிகளுக்கும், சந்ததிகளின் சந்ததிகளுக்கும் கிலா∴பத்துடன் நிலையான தொடர்பை உருவாக்கி, அதன் அருட்கொடைகளிலிருந்து பயன் பெறுமாறு தொடர்ந்து போதித்து வருவோம் என்றும், இதன் மூலம் கிலா∴பத்தே அஹ்மதிய்யா இறுதி நாள் வரை பாதுகாப்பாகத் தொடரும் என்றும் நாங்கள் உறுதி அளிக்கிறோம்.” (அல் ∴பஸல் இண்டர்நேஷனல், 25 ஜூலை 2008)

இறுதியாக, கிலா∴பத் என்பது இறைவழிகாட்டுதலுக்கும் அருட்கொடைகளுக்கும் என்றென்றும் நிலைத்திருக்கும் ஓர் ஊற்றாகும். அது முஸ்லிம் உலகத்தின் ஆன்மாவாகவும், ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் முன்னேற்றம், நன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பிரிக்க முடியாத பிணைப்பாகவும் விளங்குகிறது.

இந்த அழைப்பு மிகவும் தெளிவானது: கிலா∴பத்தோடு உறுதியாக இணைந்திருங்கள். ஏனெனில், இந்த பிணைப்பில்தான் இருளிலிருந்து வெளியேறி இறைஒளியின் பக்கம் வருவதற்கான திறவுகோலும், நிலையான முஸ்லிம் ஒற்றுமைக்கான வழியும் இருக்கிறது.

(தமிழில்: A. நாஸிர் அஹ்மத்)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்:**

**“அல்லாஹ்வின் கலீஃபா பூமியில் இருப்பதை நீங்கள் அறிந்தால் உங்கள் உடல் நார்நாராகக் கிழிக்கப்பட்டாலும், உங்கள் செல்வங்கள் கொள்ளை அடிக்கப்பட்டாலும் நீங்கள் அவருடன் இணைந்து விடுங்கள்.”**

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் ஹதீஸ் எண்: 22333)